REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 டிசம்பர் 27 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 307 | Wednesday 27, December, 2023 | 12 பக்கங்கள் | 50/-

## ஜனாதிபதி தேர்தலுக்கான ஐ.தே.க கூட்டம் ஜனவரியில்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி தேர்தலுக்கான செயற்பாடுகளை எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கிணங்க ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் 04

### வெளிநாடுகளில் வசிக்கும்

## போதைப் பொருள் வர்த்தகர்களை கைது செய்ய விசேட திட்டம்



லோரன்ஸ் செல்வநாயகம்


வெளிநாடுகளிலிருந்து உள்நாட்டில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தக வலையமைப்பை முற்றாக ஒழிப்பதற்காக நாடளாவிய ரீதியில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்தின் ஒரு அம்சமாக இது மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு வெளிநாடுகளிலிருந்து செயற்படும் போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள உலக குழுவினர் 30 பேரை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைதானதும் 04

## கொவிட் தொற்றுக்கான அறிகுறிகள் நாட்டில் இல்லை

### மாதிரிகளை பரிசோதித்ததில் ஊர்ஜிதம்



உலகில், கொவிட் வைரஸின் துணை பிறழ்வான ஜே.என்.1 பரவல் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில்,

நாட்டின் நிலை குறித்து அறிந்து கொள்ள, அரசாங்கம் அதிக அக்கறை செலுத்தியுள்ளது.

பிரதான வைத்தியசாலைகளிலிருந்து பெறப்பட்ட மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவற்றில் கொவிட் தொற்று இனங்காணப்படவில்லை என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. எனவே ஜே.என்.1 பிறழ்வினால் ஏற்படக் 04

## தீவிரமடைகிறது டெங்கு

## ஐம்பது பேர் மரணம்

## 85,636 பேருக்கு தொற்று

லோரன்ஸ் செல்வநாயகம்

Ministry of Health

### கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 12 ஆயிரத்தால் அதிகரிப்பு

நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்தும் இதுவரை 85,636 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டில் 50 டெங்கு நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாகவும் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தால் அதிகரித்துள்ளதாகவும் அப்பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயினை கட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை துரித கெதியில் முன்னெடுக்குமாறு பணித்துள்ளதாகவும் அமைச்சர டக்ளஸ் தேவானந்த தெரிவித்துள்ளார். யாழில். நேற்றைய தினம் 04

## முல்லைத்தீவு சுனாமி வளாகத்தில் அஞ்சலி



நாடு முழுவதும் நேற்று (26) சுனாமி 19 ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. முல்லைத்தீவு சுனாமி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில், ஒன்றுகூடியோர், தமது உறவுகளை நினைத்து உணர்பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். முல்லைத்தீவு மாவட்டத்திலேயே சுனாமியால் அதிகளவானோர் உயிரிழந்தனர். இத்தினம் தேசிய பாதுகாப்பு தினமாகவும் அனுஷ்டிக்கப்படுவதுடன் இயற்கை அனர்த்தங்கள் குறித்தும் மக்களுக்கு விழிப்பூட்டப்படுகிறது.

## 'சுனாமி பேபி' அஞ்சலி



'சுனாமி பேபி' என்ற அழைக்கப்பட்ட அபிலாஷ் தனது இல்லத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுனாமித் தூபியில் நேற்று (26) காலை 9.26 மணிக்கு பெற்றோருடன் இணைந்து சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினார். தற்போது அபிலாஷுக்கு 19 வயதாகிறது.

(படம்: பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

## தனித்துவ நினைவாற்றலுள்ள மாணவனாக முரளி சாதனை

### உலக சாதனை புத்தகத்தில் இலங்கை சிறுவன்



உலகின் தனித்துவ நினைவாற்றலுள்ள மாணவராக (2023) புகழ் பெற்ற சோழன் உலக சாதனை புத்தகத்தில், இலங்கை சிறுவனான பாக்கியராசா முரளிதரன் இடம்பிடித்துள்ளான்.

இம்மாணவன்,பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்பது குறிப்பிடத்தக்கது. இச்சிறுவன், ஆட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர் என்பதும் 04

## அமைச்சர் கெஹலியவின் இல்லத்தில் வாக்குமூலம்



தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழு, நேற்று (26) முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் இல்லத்துக்குச் சென்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

இதன்போது ரம்புக்வெல்லவுக்காக சட்டத்தரணிகள் குழுவொன்றும் அங்கு ஆஜராகியிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பேருவளை பிரதேச வைத்தியசாலையின்

## வைத்தியரை தாக்கிய வர்த்தகர் கைது



வைத்தியர் ஒருவரை தாக்கியதாக கூறப்படும் வர்த்தகரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான வர்த்தகர் அளுத்கம, மொரகல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் என பேருவளை பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபரான வர்த்தகர், நெஞ்சுவலியால் சுகவீனமுற்றிருந்த தனது தந்தையை (25) பேருவளை பிரதேச வைத்தியசாலைக்கு காரில் அழைத்து வந்துள்ளார். தந்தைக்கு கடுமையான சுகவீனம் 04

## சமூக வலைத்தளங்களில் போலி விளம்பரங்கள்; அவதானம் அவசியம்

### மியன்மாரில் சிக்கியோரை மீட்கவும் நடவடிக்கை



சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலி விளம்பரங்களில் ஏமாற வேண்டாம் என, பொலிஸ் தலைமையகம் மக்களை அறிவுறுத்தியுள்ளது. வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாக சில சமூக வலைத்தளங்களில் போலி விளம்பரம் செய்யப்படுவதால், அவதானத்துடன் செயற்படுமாறும் மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சட்டபூர்மான ஏற்பாடுகளில் வெளிநாடு செல்ல முயற்சித்து சிக்கல்களில் மாட்டிக்கொள்வோருக்கு மாத்திரமே, 04

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக மனோ

### பிரதேச பூர்வீகங்களில் தெளிந்த அனுபவமுடையவர்




ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் போட்டியிடுவதற்கு பலரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டாலும் மனோகணேசன் எம்பியே, பொருத்தமானவர் என, ஸ்ரீ டெலோ செயலாளர் நாயகம் உதயராசா தெரிவித்துள்ளார். இதுபற்றிக் குறிப்பிட்ட அவர்: 04



## நூறடி நீளத்தில் கிறிஸ்மஸ் தாத்தாவின் மணற்சிற்பம்

### இந்திய கலைஞரின் அற்புத படைப்பால் அதிசயம்




இந்தியா ஒடிசாவின் பூரி கடற்கரையில் உருவாக்கப்பட்டுள்ள பிரமாண்டமான கிறிஸ்துமஸ் தாத்தா உருவ மணற்சிற்பம் காண்போரை கவர்ந்திழுத்து ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. இந்த மணல் சிற்பத்தை ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பிரபல மணற்சிற்பக் கலைஞரான சுதர்சன் பட்நாயக் அமைத்துள்ளார். 2,000 04

## பஸ்வண்டி மோதி எட்டு மாடுகள் ஸ்தலத்தில் பலி

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி நாயாத்துவழி பகுதியில் கடந்த (25) திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில், எட்டு மாடுகள் உயிரிழந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கி பயணிகளுடன் அதி வேகமாக பயணித்த தனியார் பஸ்வண்டி, வீதியில் நின்ற மாடுகளில் மோதியது. இதில், கூட்டாகச் சென்ற எட்டு மாடுகள் ஸ்தலத்தில் உயிரிழந்தன. மேலும் பல மாடுகள் காயமடைந்துள்ளன. மேய்ச்சலுக்குச் சென்று பண்ணை நோக்கி திரும்பிய மாடுகளிலே, பஸ் வண்டி மோதியுள்ளது. சாரதியின் கவனயீனமே குறித்த விபத்திற்கு காரணம் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## ஆமர் வீதியில் ஏற்பட்ட தீ, கட்டுப்பாட்டுக்குள்!



கொழும்பு ஆமர் வீதி பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட தீ, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. தீயை கட்டுப்படுத்துவதற்காக ஆறு தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி 04

## தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து தேசிய தேர்தல்களில் பாரிய கூட்டணி



தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து பரந்துப்பட்ட அரசியல் கூட்டணியமைத்து 2024இல், இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் போட்டியிடவுள்ளதாக

ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் குடியரசின் கூட்டத்தில் உரையாற்றுகையிலே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுபற்றித் தெரிவித்த அவர்: 2024 தீர்மானமிக்கது. 04

## பிரித்தானிய கழகமட்ட கிரிகெட்டில் யாழ்ப்பாண யுவதி




பிரித்தானிய கழகமட்ட கிரிக்கெட் அணியில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட அமுருதா சுரேன்குமார், தனக்கான இடத்தை தக்கவைத்துள்ளார்.

யாழ். காரைநகரை பூர்வீகமாக கொண்ட அமுருதா சுரேன்குமார், பிரித்தானியாவின் சன்ரைஸ் அகடமி குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். 04

# நகர்வலம்



# நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிப்பு

## இதுவரை 85,636 நோயாளர்கள் பதிவு; 50 பேர் பலி – சுகாதார அமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் அனைத்து பகுதிகளிலுமிருந்து இதுவரை 85,636 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டில் 50 டெங்கு நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாகவும் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தால் அதிகரித்துள்ளதாகவும் அந்த பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் நாட்டில் 72, 903 டெங்கு நோயாளர்களே பதிவாகியிருந்த நிலையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அந்த எண்ணிக்கை 85,636 ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் வெகு வேகமாக அதிகரித்து வருவதாக அந்த மாகாணத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 11 மாத குழந்தையொன்று டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் உலக அளவில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சு, டெங்கு நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதை உறுதி செய்யுமாறு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

# இனிய நந்தவன 'இலங்கை சிறப்பிதழ்' அறிமுக நிகழ்வு

## புரவலர் நாளை துபாய் பயணம்



ஐக்கிய அரபு அமீரக துபாய் நகரில் நடைபெறவுள்ள இனிய நந்தவனத்தின் இலங்கை சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் (29ஆம்திகதி) வெள்ளிக்கிழமை மாலை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் துபாயில் உள்ள இலங்கை இந்திய எழுத்தாளர்கள், கவிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# புதிய செயலாளராக பிரதீப் யஸரத்ன நியமனம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் புதிய செயலாளராக மேல் மாகாண பிரதம செயலாளர் பிரதீப் யஸரத்ன நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் விசேட தர அதிகாரியான இவர், இரத்மலான, ஹோமாகம பிரதேச செயலாளராகவும் கொழும்பு மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பல்வேறு அரச துறை சார்ந்த பதவிகளையும் ஏற்கனவே வகித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவரான இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத் துறை கௌரவ பட்டதாரியும், களனி பல்கலைக்கழக சாஸ்திர பீட பட்டதாரியுமாவார்.

**கணவன் – மனைவி கடும் வாக்குவாதம்**

# கோபமடைந்த கணவர் வீட்டுக்கு தீயிட்டார்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் கோபமடைந்த கணவர் தமது வீட்டை தீ வைத்து கொளுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் (23) ஆராச்சிக் கட்டுவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, வீடு முழுமையாக தீக்கிரையானதுடன் , பல இலட்சம் பெறுமதியான பொருட்களும் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்த பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இன்று அறிவோர் ஒன்றுகூடல்

## விசேட பட்டிமன்ற நிகழ்வில் நடுவராக சி.பி கண்ணன் பங்கேற்பு

கொழும்புதமிழ்ச்சங்கத்தில் இன்று (27) அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. சினிமா போதையே என்ற தலைப்பில் தனுஜா ராஜேந்திரம், கீர்த்திராஜ் அருள்செல்வன், சபிஷாந் மோகன் ஆகியோரும் டிஜிட்டல் போதையே (சமூகஊடகம்) என்ற தலைப்பில அபிஷனா திருத்தணிசன், விதுர்ஷனா நித்தியராஜ், அபிலாஷ் விஜயகுமாரன் ஆகியோர் சொற்போர் நிகழ்த்துவர்.

மேற்படி பட்டிமன்ற நிகழ்வில் நடுவராக வழக்கறிஞரும் ஆன்மீக இலக்கிய சொற்பொழிவாளரும் மனிதவள மேம்பாடு பயிற்சியாளரும் தமிழ்த் தென்றல் முனைவர் எஸ்.டி. கலையமுதன் (சேலம்) கலந்து சிறப்பிப்பார். யாழ்ப்பாண இந்திய துணைத்தூதுவர் ராஜேஷ் நடராஜ் இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் சி.பி. கண்ணன், எஸ்.டி.கலையமுதன் ஆகிய இருவருக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29) தூதுரகத்தில் வரவேற்றுபசாரமும் இடம்பெறவுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு சுழிபுரம் கலைமகள் இலவசக் கல்வி நிலையம் மற்றும் தில்லி கலை இலக்கிய பேரவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறப்பு பட்டிமன்ற நிகழ்விலும் சிறப்பு விருந்தினராக இருவரும் கலந்து சிறப்பிப்பர்.

மாணவர்களிடையே பெருகி வரும் போதைப்பாவனைக்கு காரணம் குடும்பத்தின் கவனயீனமா? அல்லது சமூகத்தின் நெறிபிறழ்வா? என்ற தலைப்பில் இப்பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. மேலும் 30ம் திகதி மாலை 5.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்கா மணி மண்டபத்தில் பகவான் ரமண மகரிஷியின்

144வது ஜெயந்தி தின நிகழ்வில் எஸ்.டி கலையமுதன் ஆன்மீக அருளுரை நிகழ்த்துவார். இவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகள் திருகோணமலை மற்றும் முல்லைத்தீவிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எச்.எச்.விக்கிரமசிங்க

# நீரோடையிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தம்புத்தேகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட மல்வாநேகம பகுதியில் உள்ள நீர் ஓடையில் இருந்து மர்மமான முறையில் உயிரிழந்த நபரொருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று (26) மதியம் மேற்கொண்ட தேடுதலின் போது குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மல்வாநேகம தலாவ பகுதியைச் சேர்ந்த வீ.பீ. ஜினதாச என்ற 55 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது கொலையா? அல்லது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளாரா? என்பது தொடர்பில் இப்போதைக்கு உறுதியாக தெரிவிக்க முடியாதுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பம் தொடர்பில் தம்புத்தேகம பொலிசார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# முறையற்ற தொடர்பில் உருவான சிசுவை புதைத்த பெண் கைது

**அநுராதபுரம் மேற்கு, திறப்பனை தினகரன் நிருபர்கள்**

தம்புத்தேகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட தேக்கவத்த பிரதேசத்தில் சிசுவை புதைத்த பெண் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

நீண்டகாலமாக கணவரை பிரிந்து பிள்ளைகளுடன் தனியாக வாழ்ந்து வந்த குறித்த பெண், காலதிவுல் வெவ பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவருடன் தொடர்பு வைத்திருந்ததாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. குழந்தை உருவாகி 06 மாதமாக இருந்த நிலையில் கருவை கலைப்பதற்காக சில மாத்திரைகளை உட்கொண்டதாக சந்தேக நபரான பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ள நிலையில், குறித்த தகவல்களை அடிப்படையாக கொண்டு விசாரணைகளை மேற்கொண்ட போது சிசு புதைக்கப்பட்ட இடத்தை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பெண் மற்றும் பெண்ணுடன் தொடர்பை மேற்கொண்டிருந்ததாக கூறப்படும் நபரையுய் பொலிசார் கைது செய்துள்ளனர்.

# அகுரஸ்ஸ அல் ஹுதா மாணவிக்கு '9A' சித்திகள்

**(வெலிகம தினகரன் நிருபர்)**



அண்மையில் வெளியாகிய க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேற்றின் படி, மாத்தறை மாவட்ட அகுரஸ்ஸ வலய மாறை, ஹொரகொட அல் ஹுதா கனிஷ்ட வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுல் எம்.என்.எப். ஷிம்ரா எனும் மாணவி 9 பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளமை 87 வருட பாடசாலை வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும். மேலும் இதே மாணவி, 2016ம் ஆண்டு 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.



அநுராதபுர மாவட்டம் நாச்சியாதீவு பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் கே.எம்.எம். ஜாபர் அவர்களுக்கு கல்லூரியில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தின் போது தரம் 07 ல் கல்வி பயிலும் சாஹிரா மாணவன் முஹம்மட் தில்சான் மகீஷ், தான் வரைந்த அதிபரின் உருவப்படத்தை அன்பளிப்பாக அதிபரிடம் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

(படம்: திறப்பனை தினகரன் நிருபர்)

## சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 19 வருடம்

# ஹம்பாந்தோட்டையிலும் நினைவு தினம் அனுஷ்டிப்பு





**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 19 வருடம் பூர்த்தி மற்றும் நினைவு தினம் நேற்று (26) நாடளாவியரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது. ஹம்பாந்தோட்டை மாவட்டநிகழ்வுகள் ஹம்பாந்தோட்டை பீச் பார்க்கில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வினை மாவட்ட செயலகம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை வர்த்தக சங்கம் ஆகியன ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வில் சர்வ மதத்தலைவர்களுடன் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர, மேலதிக செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ஆர். விந்தர்சிங், ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் ஆணையாளர் உட்பட முன்னாள் மேயர், எதிர்க்கட்சித் தலைவர், அனர்த்த முகாமைத்துவ நிலைய மாவட்ட பணிப்பாளர், பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, ஹம்பாந்தோட்டை பீச் பார்க்கிற்கு முன்னால் கலந்து கொண்டோரினால் சுனாமி நினைவு தூபிற்கான அடிக்கல்லும் நட்டி வைக்கப்பட்டது.

சுனாமியினால் உயிரிழந்த மக்களுக்காகவும் அவர்களது குடும்பங்களுக்காகவும் விசேட சர்வமத பிரார்த்தனைகளும் இதன்போது இடம்பெற்றன.

# கற்பிட்டி பிரதேச நத்தார் விருந்தில் கைகலப்பு; பொலிஸ் கான்ஸ்டபிள் காயம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி, தளுவ நிர்மலாபுர பிரதேசத்தில் நத்தார் விருந்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் , வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தப்பிச் சென்றுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த புதிய பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன்தினம் (25) காலை நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையை பொறுப்பேற்றிருந்தார் எனவும், அவர் ஊழல் ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்றிரவு (25) இரவு குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் தனது நண்பர்கள் சிலருடன் விருந்தில் கலந்து கொண்டதுடன், அந்த விருந்தில் குழுக்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாக்குவாதம் முற்றிய நிலையில், அங்கிருந்த சிலர் பொலிஸ் கான்ஸ்டபிளையும் அவருடன் வந்த நண்பர்களையும் தாக்கியுள்ளனர்.

இதுபற்றி நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸ் குழு, தாக்குதலுக்கு உள்ளான புதிய பொலிஸ் கான்ஸ்டபிளை சிகிச்சைக்காக வைத்திசாலையில் அனுமதித்துள்ளனர்.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குடும்ப பெண் கைது

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த குடும்ப பெண்மணி ஒருவரை சந்தேகத்தின்பேரில் மாத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தளை கிரிமெட்டியாவ பிரதேசத்தில் நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின்போதே பெண் ஒருவரும் அவரது 11வயது மகளும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக போதைப்பொருள் விற்பனை செய்து வந்ததாக கூறப்படும் குறித்த பெண்ணிடமிருந்து 5567 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 27 புதன்கிழமை
**தினகரன்**
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.57 |
| லுஹர் | 12.13 |
| அஸர் | 03.33 |
| மஃரிப் | 06.03 |
| இஷா | 07.18 |

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் மார்கழி 12

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# கிழக்கின் வரலாற்றில் முதல் முறையாக மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம்

**பத்தாயிரம் பேர் புகைப்படம் பிடிப்பு**



கிழக்கு மாகாண வரலாற்றில் மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல்,இம்மரத்தை திறந்துவைத்தார்.

டச்பே (DUCHBAY) கடற்கரையில் இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த (24) இரவு இடம்பெற்ற விசேட சமய ஆராதனை நிகழ்வுகளிலும் கிழக்கு மாகாண அளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டிருந்தார்.

டச்பே (DUCHBAY) கடற்கரையில் அமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரத்தின் முன்னிலையில், இதுவரை 10ஆயிரத்துக்கும் அதிகமானோர் புகைப்படங்களை எடுத்துள்ளனர்.

# கதிர்காம ஆலய பிரதான பூசகர் மாயம் என முறைப்பாடு!

கதிர்காமம் ஆலயத்தின் பிரதான பூசகர் சோமிபால டி. ரத்நாயக்க காணாமல் போனதாகக் கூறப்படும் முறைப்பாடு தொடர்பில், விசாரிப்பதற்கு பல தரப்பினரும் இன்று (27) கதிர்காமம் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சோமிபால டி. ரத்நாயக்காவை காணவில்லை என அவரது மகள்களும் மற்றுமொரு குடும்ப உறவினரும் கதிர்காமம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தந்தை சமீபத்தில் தனது மூத்த சகோதரி ஒருவருடன் வீட்டை விட்டு வெளியேறியதாகவும், அதன் பின்னர் இதுவரை அவரைப் பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும் மகள்மார் பொலிஸில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இன்று பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பிரபல பாதாள குழு உறுப்பினரான அங்கொட லொக்காவின் மனைவியால் கதிர்காமம் ஆலயத்திற்கு வழங்கிய 38 பவுண் தங்க தகடு காணாமற் போனதையடுத்து, ஆலயத்தின் தலைவர் பிரதான பூசகர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தை விசாரணை செய்த குழுவினர், கதிர்காமம் ஆலயத்தின் களஞ்சியசாலை காப்பாளராக இருந்த சுட்டி கபுரல என்பவரை கைது செய்து, பின்னர் பிணையில் விடுவித்துள்ளனர்.

# கொழும்பிலிருந்து பெரேலியவுக்கு

**சுனாமி நினைவு ரயில்**

சுனாமி அனர்த்தத்தில் சிக்கிய புகையிரத பயணிகள் மற்றும் புகையிரத ஊழியர்களை நினைவுகூரும் வகையில் நேற்று (26) காலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து பெலியத்த வரை புகையிரதம் ஒன்று இயக்கப்பட்டுள்ளது.

காலை 6.25 மணிக்கு மருதானை நிலையத்தில் இருந்து புறப்பட்ட இப்புகையிரதம் 6.50 மணிக்கு கொழும்பு கோட்டை நிலையத்தில் இருந்து புறப்பட்டது.

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் சிக்கிய ரயில் என்ஜின் 591 இன்று பயணிக்கின்றமை ஒரு சிறப்பு அம்சமாகும்.

591 ஆம் இலக்க என்ஜினுக்கு கோட்டை ரயில் நிலைய அதிகாரிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

ரயில் புறப்பட்டு பெரேலிய நிலையத்தில் சுமார் 10 நிமிடங்கள் நிறுத்தப்பட்டு சுனாமி நினைவேந்தலும் நடைபெற்றது.

# கொழும்பு டைம்ஸ் கலண்டர்; அமைச்சரிடம் கையளிப்பு

**(ருஸைக் பாரூக்)**

கொழும்பு டைம்ஸ் செய்தி இணையத்தளம் 2024 புத்தாண்டுக்கான கலண்டரை வெளியிட்டுள்ளது. வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரியிடம், கொழும்பு டைம்ஸின் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன் நேற்று (26) கலண்டரின் முதல் பிரதியை வழங்கி வைத்தார்

ரசூல்தீன், ஜித்தாவை தளமாகக் கொண்டு இயங்கும் அரபு செய்திகளின் இலங்கையின் வெளிநாட்டு நிருபராகவும் பணிபுரிகிறார்.

கொழும்பு டைம்ஸ், இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள பிற முக்கிய நகரங்களில் இருந்து கிட்டத்தட்ட மூன்று மில்லியன் பக்க பார்வைகளைப் பதிவு செய்துள்ளது. ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து, மத்திய கிழக்கு, ஐரோப்பா, ஆபிரிக்கா, சார்க் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் இது, பிரபலமாகியுள்ளது.




# போதைப்பொருள் விநியோகஸ்தர் கைது

அம்பாறை பிரதேசத்துக்கு போதைப்பொருள் விநியோகித்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர், போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நகரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே, இவர் கைதானார்.

அம்பாறை நகருக்கு ஐஸ் கொண்டு வந்து விநியோகம் செய்யும் பிரதான சந்தேக நபராக இவர், அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது**

இல. 153, கொழும்பு வீதி, கம்பஹா எனும் இடத்தில் இயங்கிய இலங்கை சிட்டிசன்ஸ் கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் 2024 ஜனவரி 15ஆம் திகதி முதல். இல. 176, காசல் வீதி, கொழும்பு - 08 எனும் இடத்தில் இயங்கும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**இலங்கை சிட்டிசன்ஸ் கூட்டுறவு வங்கி,**
**இல. 176, காசல் வீதி,**
**கொழும்பு - 08**




## சிறுவர்களிடையே
# சுவாச நோய்கள் பரவும் அபாயம்

சிறுவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.சிறுவர்களை, சன நெரிசலான இடங்களுக்கு அழைத்துச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஜி.விஜேசூரிய அறிவுறுத்தியுள்ளார்.

இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணியுமாறும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



இந்திய தொழில்நுட்பக்கழகத்தை (IITMadras) இலங்கையில் நிறுவ வேண்டிய தேவை குறித்து கலந்துரையாடுவதற்கு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையிலான குழுவினர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தனர்.துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன் உள்ளிட்ட இந்திய தொழில்நுட்பக் கழக முக்கிய பிரமுகர்களுடன்,இலங்கைக்குழு பேச்சுவார்த்தை நடத்தியபோது பிடிக்கப்பட்ட படம்.

# தொலைபேசிகளின் விலைகள் 18 சதவீதத்தால் அதிகரிக்கும்

தொலைபேசிகளின் விலைகள் அடுத்த மாதத்திலிருந்து 18 சதவீதத்தால் அதிகரிக்கும் என, தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பெறுமதி சேர் வரி விதிக்கப்படுவதே, இதற்கு பிரதான காரணமெனவும் சங்கத்தின் தலைவர் சமித் செனரத் தெரிவித்துள்ளார்.

# இலக்கியக்களத்தில் இசைக்கச்சேரி

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் (29) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இலக்கிய களம் நிகழ்வு நடைபெறுகிறது.சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில், கொழும்புத் தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் திருமதி வசந்தி தயாபரன் தலைமையில் "இசைக்கச்சேரி" நடைபெறவுள்ளது. இசை முதுகலைமாணி திருமதி சந்திரிகா ரவிகுமார் இசை வழங்குவார்.

குயிலுவக் கலைஞர்களாக வயலின் முதுகலைமாணி திருமதி சுவர்ணாங்கி சுகர்தன், மிருதங்கம் திரு.வை.வேனிலான் ஆகியோரும் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## செல்லச் சிட்டுக்கள்
# சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு நிகழ்வு

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

கிண்ணியா சபீனா எழுதிய செல்லச் சிட்டுக்கள் சிறுவர் பாடல் நூல் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்,எஸ், தௌபீக்கும் சிறப்பு அதிதியாக திட்டமிடல் பணிப்பாளர் முஸ்இலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிண்ணியா வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்,சமீம் அவர்கள் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கி நிகழ்வினை வழி நடாத்தினார்.

நிகழ்ச்சித் தொகுப்பாளராக கிண்ணியா வலய ஆசிரிய வளவாளர் ஜனாப் சதாத் ரெலிகான் நிகழ்வுக்கு வலுவூட்டினார்!

நூல் நயவுரையினை ஆசிரிய வளவாளரும் இலக்கிய ஆய்வாளருமான ஜனாப் ஜெஸ்மி மூஸா அவர்கள் நயம்பட வழங்கினார்!

இந்நூலினை லக்ஸ்டோ மீடியா வெளியிட்டு வைத்தது என்பது குறிப்பிடத் தக்கது!



ஆழிப்பேரலையின் 19ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வு நேற்று (26) பாணந்துறை கடற்கரை பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டதோடு சுனாமி அனர்த்த நினைவு நிகழ்வுகள் சர்வ சமய மதகுருமார்களின் பங்களிப்புடன் இடம்பெற்றன. இதில் பௌத்த, கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாமிய மதப் போதகர்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பதை படத்தில் காணலாம்.

(படம் பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**
**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**
**மாவட்ட சமுர்த்தி அலுவலகம் – கம்பஹா**

**2023 டிசம்பர் 06 ஆம் திகதி தினமின, தினகரன், டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் வெளியான பெறுகை அறிவித்தலின் திருத்தம்**

**கம்பஹா, மாவட்ட சமுர்த்தி அலுவலகத்துடன் இணைந்த சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கி சமூகங்களுக்கான கணினிகள் மற்றும் அது சார்ந்த துணைப் பொருட்களின் கொள்வனவு**

விலைமனு ஆவணங்களை வழங்கல் மற்றும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

1. கம்பஹா - மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் இருந்து 2023.12.27 ஆம் திகதி தொடக்கம் 2024.01.17 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் பெறுகை விண்ணப்பப் படிவங்களை பெற முடியும்.
2. கூறுவிலைகளை ஏற்பது 2024.01.18 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு நிறைவடைவதோடு அதன் பின்னர் இந்த அலுவலகத்தில் உடன் திறக்கப்படும்.
3. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கம்பஹா மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் 2024.01.08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.
4. ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் 2023.01.06 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் உள்ளவாறு மாற்றமின்றி நீடிக்கும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**5ஆவது மாடி,**
**"லக் சியனே மந்திரய"**
**கம்பஹா**





கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் தத்தாத் ரேயர் ஜயந்தி தினம் ஆலய பிரதம அறங் காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது, ஆலய வளவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குருஸ்தானுக்கு பிரதம அறங்காவலர் கலசாபிஷேகம் செய்து வைத்தார். பூஜை மற்றும் ஆகம கிரியைகளை பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த சிவாச்சாரியார் மேற்கொண்டிருந்தார்.
(படங்கள்: எஸ்.ராமதாஸ்)

## ஐம்பது பேர் மரணம்...

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப் பிலேயே, இவ்வாறு அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதனை கட் டுப்படுத்த சுகாதார சேவைகள் பணிமனை நடவ டிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இது தொடர்பில் பணிப்பாளருடன் கலந்து ரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுக்க கூறியதுடன் , அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை கள் தொடர்பில் கேட்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நுளம்புக்கு புகை அடிப்பது, டெங்கு பரவும் சூழல்களை இனம் கண்டு அவற்றை அழிப்பது போன்ற செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்ப டுவ தாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் நாட்டில் 72, 903 டெங்கு நோயா ளர்களே பதிவாகியிருந்தனர். இந்நிலையில் இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அந்த எண்ணிக்கை 85,636 ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 945 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரி வித்துள்ள அவர்

கடந்த இரண்டு தினங்களுக்கு முன் யாழ்ப் பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 11 மாத குழந்தையொன் றும் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு உயிரிழந்த குழந்தை யாழ்ப்பாணம் தாவடி பிரதேசத்தைச் சேர்ந்த மதுரன் கிருத்திஸ் என்றும் அவர் தெரிவித் துள்ளார். டெங்கு நோய் காரணமாக வைத்திய சாலையில் சில தினங்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, அந்த குழந்தை உயிரிழந்துவதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் சில மாண வர்களுக்கு டெங்கு நோய் பாதிப்பு ஏற்பட்டுள் ளதாக குறிப்பிட்டுள்ள அவர், சில தினங்களுக்கு முன் அந்த பல்கலைக்கழகத்தின் மாணவர் குண ரத்னம் சுபின் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மர ணமடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அவரது இறுதிக்கிரியைகள் கிறிஸ்மஸ் தினத்தன்று யாழ். தெல்லிப்பழையில் இடம் பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கிறிஸ்மஸ் தினமான 25 ஆம் திகதி மாத்திரம் யாழ்ப்பாணத்தில் 40 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

அத்துடன் மாத்தறை சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் மத்தியில் ஒரு வகை காய்ச்சல் ஏற்பட் டுள்ளதாக சிறைச்சாலை புனர்வாழ்வு பிரிவு ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைக்குள் அந்த நிலைமையை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள் ளதாக தெரிவித்துள்ள அவர், தொடர்ந்தது சுகாதார வழிமுறைகள் அங்கு பின்பற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த காய்ச்சல் காரணமாக ஒரு சிறைக் கைதி உயிரிழந்துள்ளதுடன் மேலும் 17 பேர் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

இந்த வருடத்தில் இலங்கையில் மட்டுமின்றி உலக அளவில் டெங்கு நோயாளர்களின் எண் ணிக்கை வெகுவாக அதிகரித்து காணப்படுவ தாக குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சு, டெங்கு நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதை உறுதி செய்யுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

## கொவிட் தொற்றுக்கான...

கூடிய பொது சுகாதார அச்சுறுத்தல் குறைவா கவே காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும் முன் னெச்சரிக்கை நடவடிக்கையாக கொவிட் தொற்றை இனங்காண்பதற்கான பரிசோதனைகள் அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டி யுள்ளது.

இது தொடர்பில் அமைச்சினால் வெளியிடப்பட் டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது :

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் கடந்த (22) கொவிட்19 வைரஸின் மாறுபாடாக ஜே.என். 1 பிறழ்வு அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் ஆராயப்பட வேண்டும். எவ்வாறிருப்பி னும் இதனால் ஏற்படக் கூடிய பொதுச் சுகாதார அச்சுறுத்தல் குறைவாகவே காணப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

வடக்கு அரைக்கோளத்தில் குளிர்காலம் தொடங் குவதால், இந்த துணை வகை மற்றும் இன்ஃப்ளூ யன்ஸா உள்ளிட்ட பிற சுவாச நோய்கள் அப்பகுதி களை பாதிக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. ஜே.என்.1 பிறழ்வு இந்தியா, சீனா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற பல நாடு களில் அடையாளம் காணப்பட்டுள்ளன .

தற்போதைய உலகளாவிய சூழ்நிலையை கருத் திற்கொண்டு , சுகாதார அமைச்சானது உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய அலுவல கத்துடன் கலந்தாலோசித்தது.

இதையடுத்து, 19 பிரதான மருத்துவமனைகளில் சுவாச நோய்களின் கட்டுப்பாட்டு நடவடிக்கை களை அரசாங்கம் வலுப்படுத்தியுள்ளது. கொவிட் தொற்றை இனங்காண்பதற்கான பரிசோதனை களை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இலங்கையில் ஜே.என்.1 பரவும் அபாயத்தை மதிப்பிடுவதற்கு மரபணு பரிசோதனைகளை மேற் கொள்ளுமாறு, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த சில மாதங்களாக நாட்டில் நடத்தப்பட்ட சோதனை களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கொவிட் நோயாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர்.

எனினும் கடந்த சில நாட்களாக, சிறப்பு கவனம் செலுத்தி, தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின்படி, முக்கிய மருத்துவமனைகளிலிருந்து மாதிரிகள் பெறப்பட்டு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன.

## சமூக வலைத்தளங்களில் போலி...

அதிகாரிகள் தலையிடுவர் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள் ளார்.

மியன்மாரில் சிக்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில், கொழும்பில் இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மியன்மாரின் பயங்கரவாத குழு ஒன்றின் முகாமில் 56 இலங்கையர்கள் வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டு இணைய அடிமைகளாக பணிபுரிந்து வருகின்றனர். கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் மூன்று இலங் கையர்கள் மற்றும் சீன பிரஜை ஒருவர் உட்பட 4 பேரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டு முதல் இலங்கை இளை ஞர்கள் இந்த அவலத்தை எதிர்நோக்கி வருகின்ற னர். வெளிவிவகார அமைச்சு இதற்கு முன்னர் 32 இலங்கையர்களை பல சந்தர்ப்பங்களில் மீட்டுள் ளது. தற்போது மியன்மாரில் இருக்கும் இலங்கை யர்களை மீட்பதற்காக வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே யங்கூனில் உள்ள இலங்கை தூதரகத் தின் உதவியை நாடியுள்ளது.

இதற்கிடையில் மியன்மார் பயங்கரவாத முகாமில் சிக்கியுள்ள இலங்கை இளைஞர்களை விடுவிப்பதற்காக ஆறு நாடுகளை உள்ளடக்கிய கூட்டு முயற்சி ஒன்று இடம்பெற்று வருகின்றது.

இந்தியா, பூட்டான், பங்களாதேஷ், மியான்மார், தாய்லாந்து மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளு டன் இணைந்து சிறைபிடிக்கப்பட்ட இலங்கையர் களை மீண்டும் தாயகத்திற்கு அழைத்து வருவதற் கான செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள் ளார்.

## ஜனாதிபதி தேர்தலுக்கான...

கொண்டு நாடளாவிய ரீதியில் தொடராக கூட் டங்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.கட்சியின் பிரதான முதலாவது கூட்டம் கொழும்பில் நடைபெற்று, நாடளாவிய ரீதியில் ஏனைய கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தாகவும் ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரி வித்தன.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட் டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, உயர் அதிகாரங்களை கொண்ட குழு மற்றும் ஏனைய குழுக்களுக்கான பிரதிநிதி களை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் உத்தியோக பூர்வமாக இந்த குழுக்களுக்கான பிரதிநிதிகள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடு களை மேற்கொள்ளுமாறு கட்சியின் தலைவ ரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க கட்சி முக்கியஸ்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ள தாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டமைத்து...

2019 ஆம் ஆண்டு 69 இலட்ச மக்கள் அரசி யல் ரீதியில் செய்த தவறின் பிரதிபலனை ஒட்டு மொத்த மக்களும் தற்போது எதிர்கொள்கின்றனர். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.விசேட வைத்தியர்களின் வெளியேற்றத்தால் நாட்டின் சுகாதாரத்துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள் ளது. தற்போதைய நெருக்கடிகளை நினைவில் கொண்டு அரசியல் ரீதியில் மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பலர் வரிசை யில் நிற்பதாக ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார் கள். 2019 ஆம் ஆண்டும் இவ்வாறு குறிப்பிட்டுக் கொண்டுதான், கோட்டபய ராஜபக்ஷவை கள மிறக்கினர் . இதன் இரண்டாம் பாகத்தை அடுத்த ஆண்டும் அரங்கேற்ற முயற்சிக்கிறார்கள்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் ராஜபக்ஷக்கள் தோல்வியடைவர். அறிவார்ந்த மக்கள் ராஜபக்ஷக்களை இனி ஆதரிக் கப் போவதில்லை. மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது,ஆகவே நிச்சயம் ஆட்சி மாற்றம் ஏற்படும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணிய மைத்து, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை தோற்றுவிப்போம் என்றார்.

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்...

ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் சமீபகால மாக பேசப்படுகிறது. அரசியல் சாணக்கியத்துடன் நெளிவு, சுழிவுடன் செயற்படுபவரே பொருத்தமா னவர். விக்னேஸ்வரன் எம்பி, சிறந்த விவேகியாக இருந்தாலும், அரசியலுக்கு அப்பாலான விடயங் களை கையாளும் அனுபவம் அவரிடம் இல்லை. நாட்டின் சகல சமூக சமூகங்களுடனும் நெருங் கிப் பழகியவர் என்ற வகையில் மனோகணேசன் எம்பியே, பொருத்தமான வேட்பாளராவார்.

வடக்கு, கிழக்கு , மலையகம், தென்னிலங்கை தமிழ் பேசும் மக்கள் , மற்றும் ஒட்டுமொத்த இலங் கையின் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலை மைகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, நீண்ட கால அரசியல் அனுபவம் இவரிடமே உள்ளது.

தமிழ் மக்கள் கடந்த காலத்தில் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களையும், வேதனைக ளையும் பெரும்பான்மை மக்களிடமும்,தலை வர்களிடமும், வெளிநாட்டு தூதவர்களிடமும் தக்க ஆதாரங்களுடன் எடுத்தரைத்து துணிச்ச லுடன் செயற்பட்டு வருபவர் மனோகணேசன். தமிழ், சிங்கள ஊடகங்களில் சகல தரப்பு அர சியல் தலைவர்களுடனும் அரசியல் ஆய்வா ளர்களின் விவாதங்களிலும் பங்கு பற்றியுள்ள இவரின் ஆளுமையே இதற்குப் போதுமானது. மலையக மக்களின் அரசியல் உரிமைகளுக் காக, அங்குள்ள தலைவர்களுடன் இணைந்து பல போராட்டங்களிலும் ஈடுபட்டு வருபவர் இவர்.

இதனால்,தமிழ் பேசும் மக்களின் அரசியல் பின் புலம் குறித்த ஆழ்ந்த தெளி வும் மனோகணேசனி டம் இருப்பதாகவும் உதயராசா தெரிவித்தார்.

## போதைப் பொருள் வர்த்தகர்களை...

இவர்களை முறைப்படி நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசேட வேலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் குறிப்பாக துபாயில் தற்போது வசிக்கும் 29 பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் போதைப் பொருள் வர்த்தகர் ஒரு வரதும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட் டுள்ளன. வெளிநாடுகளில் வாழும் பாதாள உலகக் குழு நபர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகளு டன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவ தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளை எவர் தடுத்தாலும் அல்லது இடையூறுகளை ஏற்படுத்தினாலும் நாட்டில் போதைப் பொருள் மற்றும் பாதாள உலக வலையமைப்பு முற்றாக இல்லாதொ ழிக்கப் படும் என குறிப்பிட்டுள்ள அமைச்சர், இதற் கான வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரி வித்துள்ளார்.

## தனித்துவ நினைவாற்றலுள்ள...

குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் தமிழ்நாட் டில் நிறுவப்பட்ட சோழன் உலக சாதனை புத்தகத்தில், இச்சிறுவன் இடம்பெறுவது இதுவே முதல் முறை என்றும் சோழன் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளார்.

நாடுகளின் நாணயங்கள், ஆட்சியாளர்க ளின் பெயர்கள், தலைநகரங்கள், மொழிகள், சிங்களம்,தமிழ்,ஆங்கில மொழிகளில், இச் சிறுவன் அதிக ஆற்றலுள்ளவரென அடை யாளம் காணப்பட்டுள்ளார். இம்மாண வன் இளம் வயதிலேயே அசாதாரண அறிவு மற்றும் நினைவாற்றலை வெளிப்படுத் தியதாலேயே உலக சாதனை புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த மதிப்பீட்டின் நோக்கம் ஆட்டிசம் குழந்தைகளைப் பற்றி பெற்றோருக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத் துவதாகும்.


இந்த மாணவனை சோழன் உலக சாதனை புத்தகத்தில் சேர்ப்பதற்கான பரீட்சை, பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயத் தில் நடைபெற்றது.

## இன்றைய பலன்கள்


**( 27. 12. 2023 )**




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.



**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.



**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.



**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.



**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர் கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதி கரிக்கும்.



**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தி யாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.



**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.



**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத் தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவா கவே கிடைக்கும்.



**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செல விற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.



**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்க

## ஆமர் வீதியில் ஏற்பட்ட...

வைக்கப்பட்டதாக தீயணைப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஆமர் வீதி பகுதியிலுள்ள கூட்டு றவு மருத்துவமனைக்கு அருகிலுள்ள கட்டிடத்திலேயே தீ பரவியுள்ளது. தீ, பரவியமைக்கான காரணம் இதுவ ரையில் வெளியாகவில்லை.

இந்நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

தீ, பரவலில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நூறடி நீளத்தில் கிறிஸ்மஸ்...

கிலோ வெங்காயம் மற்றும் மணலைக் கொண்டு இந்த கிறிஸ் மஸ் தாத்தா மணற்சிற்பம் அமைக் கப்பட்டுள்ளது.நூறடி நீளம்,இருபது அடி உயரம்,நாற்பது அடி அகலத் தில் இந்தச் சிற்பம் அமைக்கப்பட் டுள்ளது.இதுபற்றி பட்நாயக் தெரி வித்ததாவது:

ஒவ்வொரு முக்கிய நிகழ்வின்போ தும் ஒடிசாவின் பூரி கடற்கரையில் மணற்சிற்பம் அமைப்பதை வழக்க மாக கொண்டுள்ளேன், இதற்கமைய (25) கிறிஸ்மஸ் பண்டிகை கொண் டாடப்படுவதை முன்னிட்டு, பூரி கடற்கரையில் கிறிஸ்மஸ் தாத்தா மணற்சிற்பத்தை உருவாக்கினேன். 'மரக்கன்றை பரிசளிப்பீர்; பூமியை பசுமையாக்குவீர்' என்ற செய்தியை இதன் மூலம் உலகுக்கு உணர்த்துகி றோம்" என்றார்.

## பிரித்தானிய கழகமட்ட கிரிகெட்டில்...

2024 சன்ரைஸ் அகடமி குழுவில், 15 வீராங்க னைகளுக்கு வாய்ப்ப ளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அதில் ஒருவராகவே அமுருதா தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

நீண்டகால விரிவான தேர்வு செயல்முறையின் அடிப்படையில், குளிர்கால பயிற்சி திட்டத்தில் இத் தேர்வு இடம்பெற்றுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து பேர் கொண்ட அணி பின்வருமாறு:

மோலி பார்பர்ஸ்மித், ஒலிவியா பார்ன்ஸ், பிரிஷா பேடி, ஈவி புக்கர், ஹன்னா டேவிஸ், மே டிரிங்கெல், இசபெல்லா ஜேம்ஸ், பெல்லா ஜான் சன்,லைலா , ஓலோரன்ஷா, சாரா பியர்சன், சார்லி பிலிப்ஸ், மாபெல் ரீட், ஹெர்ட்ஃபோர்ட்ஷையர் ரிவா பின்டோரியா, அமுருதா சுரேன்கு மார் ஆகியோராவர். அமுருதாவின் தந்தை சென் ஜோன்ஸின் முன்னாள் கிரிக்கட் வீரர்.இவர்,145 ஓட்டங்கள் அடித்து சாதனை படைத்தவர்.

2024 மார்ச்சில் இடம்பெறவுள்ள இலங்கைக்கான இங்கிலாந்து அணியின் சுற்றுப்பயணத்தில், அமு ருதாவும் இடம்பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## வைத்தியரை தாக்கிய வர்த்தகர்...

இருப்பதாகவும், அதனால் காருக் குள் வந்து பரிசோதனை செய்யுமா றும் அவர் கோரியுள்ளார். இதனை, வைத்தியர் மறுத்ததால், ஆத்திரம டைந்த வர்த்தகர், வைத்தியரை தாக் கியுள்ளார். தாக்குதலுக்குள்ளான வைத்தியரின் கையில் காயம் ஏற்பட் டதால், வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகரை களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்ப வம் தொடர்பான மேலதிக விசார ணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

‘AIA எக்ஸ்குளுசிவ்;’ மிகவும் தனித்துவமான சலுகைகளின்

# உலகத்திற்கான உங்களின் நுழைவாயில் திட்டத்தினை அறிமுகப்படுத்தும் AIA இன்சூரன்ஸ்

இலங்கையின் மிகச்சிறந்த முதற்தரமான ஆயுள் காப்புறுதி வழங்குநராக (2019 மற்றும் 2020 இல் குளோபல் பேங்கிங் எண்ட் பைனான்ஸ் ரிவியு மற்றும் 2021, 2022 இல் கெபிடல் பைனான்ஸ் இண்டர்நெஷனல்) நிறுவனங்களினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட AIA இன்சூரன்ஸ் தனது மிகவும் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு முதற்தரமான அங்கத்துவத் திட்டமான ‘AIA எக்ஸ்குளுசிவ்;’ இனை மிகவும் மகிழ்ச்சியுடன் தனது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தது. இந்த மிகச்சிறந்த முயற்சியானது ஈடு இணையற்ற வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவதில் AIA இன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பினைச் சான்று பகர்கின்றது. ‘AIA எக்ஸ்குளுசிவ்;’ அங்கத்துவத் திட்டமானது இலங்கையின் காப்புறுதித் துறையில் முதலாவது முயற்சியாக இடம்பிடிப்பதுடன் மிகவும் கவனமாக நிர்வகிக்கப்பட்ட சலுகைகள் மற்றும் அதிசிறந்த சேவைகளின் ஏற்பாடுகளை உறுதியளிக்கும் பிரத்தியேகமான வாடிக்கையாளர்களுக்கு வெற்றிக்கான வாய்ப்புகளையும் உருவாக்குகின்றது.

AIA இல் வாடிக்கையாளரை மையப்படுத்துவது நிறுவனம் மேற்கோள்ளும் அனைத்துச் செயற்பாட்டிலும் மிகவும் முக்கியமானதாகவே இடம்பிடிக்கின்றது. இந்த திட்டமானதுAIA நிறுவனத்தில் தங்களது நம்பிக்கையினை வைத்துள்ள மக்களுக்காக AIA இன் அர்ப்பணிப்பினையும் மற்றும் பாராட்டையும் பிரதிபலிக்கின்றது. AIA இன் உயர் மட்ட வாடிக்கையாளர்கள் மிகச்சிறந்த சேவையிலிருந்து பயனடைவது மட்டுமின்றி நிறுவனத்துடனான அவர்களின் தொடர்புகளில் பிரத்தியேக உணர்வை அனுபவிப்பதை உறுதிசெய்வதற்காகவும் இது மேலும் விரிவடைந்து செல்கின்றது.

‘AIA எக்ஸ்குளுசிவ்;’ வாடிக்கையாளர்கள் தங்களின் தனித்துவமான நிதி அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட விசேடமான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட மிகவும் ஏராளமான சேவைகளையும் அனுபவிப்பார்கள். இதில் தங்கள் நிதி நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு விடாமுயற்சியுடன் செயல்படும் AIA இன் தொழில் நிபுணர்கள் குழுவிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் அணுகலும் உள்ளடங்குகின்றது. இதற்கு மேலதிகமாக அவர்கள் தங்களது தனிப்பயனாக்கப்பட்ட உதவிக்காக ஒரு பிரத்தியேக வாடிக்கையாளர் உறவு முகாமையாளரை தங்களுடன் வைத்திருக்கும் வசதியினைக் கொண்டுள்ளதுடன், அதே சமயம் மிகவும் சௌகரியமாகக் குணமடைவதற்காக வைத்தியசாலை அனுமதிக்கான விசேட மற்றும் நிபுணத்துவக் கவனிப்பையும் பெறுகின்றார்கள். மேலும் அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறே டெலிமெடிசின் முன்னுரிமைச் சேவையினைப் பெறுவதுடன் வருடாந்த சுகாதாரப் பராமரிப்பிற்கான திட்டத்தினையும் அனுபவிக்க முடியும்.

# நிதி நிறுவனங்களுக்கான CT மர்கியு விருது வழங்கும் நிகழ்வில் "சிறந்த திறைசேரி குழுவுக்கான" விருதை வென்ற கொமர்ஷல் வங்கி




ஆசியாவில் கூட்டாண்மை குழுக்களுக்காகவும் பிரதம நிதித்துறை அதிகாரிகளுக்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட அச்சு வெளியீடான கூட்டாண்மை திறைசேரி 2023ம் ஆண்டுக்கான CT விருது வழங்கும் நிகழ்வில் கொமர்ஷல் வங்கி “சிறந்த திறைசேரி குழுவுக்கான” CT மார்கியு விருதை வென்றுள்ளது.

“பல்வேறு பரிமாணங்களில் மிகச் சிறந்த பெறுபேறுகளை வழங்குவதற்கான கருவூல திணைக்களத்தின் அளப்பரிய அர்ப்பணம் வங்கியின் பிரத்தியேக செயற்பாடுகளில் மையம் கொண்டுள்ளது” என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் திறைசேரிப் பிரிவுக்கான பிரதி பொது முகாமையாளர் அசேல விஜேஸ்ரீவர்தன, “இது பண மேலாண்மை முதல் சந்தை இடர் தணிப்பு நிலை வரை செல்கின்றது. மூலோபாய முன்னேற்பாடுகள், ஆக்கபூர்வ முதலீடுகள், வாடிக்கையாளர் சேவைகளில் திடமான அவதானம் என்பனவற்றில் திறைசேரி திணைக்களம் தொடர்ச்சியாக பிரத்தியேகமான பெறுபேறுகளை வழங்கி வருகின்றது. அது எமது பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு கிளைகளின் கருவூல செய்ற்பாடுகளை முகாமைத்துவம் செய்யும் அதேவேளை வங்கியின் நிதி ஸ்திரப்பாட்டுக்கும் ஒழுங்கமைப்பு இணக்கப்பாட்டுக்கும் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றது” என்று அவர் மேலும் கூறினார்.

CT சிறந்த திறைசேரி குழு விருதானது பண மேலாண்மையில் கொமர்ஷல் வங்கியின் திறைசேரி பிரிவின் வெற்றி, அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெளிநாட்டு நாணய பற்றாக்குறை நிலைக்கு முகம் கொடுத்தமை, அதன் மூலோபாய முதலீட்டு முடிவுகள், உயர் நிலையிலான வாடிக்கையாளர் ஈடுபாடு, இலாப இலக்குகளை தாண்டிச் செல்வதில் வங்கியின் பங்களிப்பு, மேம்பட்ட ஆற்றல்கள், வெளிநாட்டு நாணயமாற்று பரிமாற்றங்கள், வெளிநாட்டு நாணய விகித இடர் முகாமைத்துவம், செலவு ஆற்றல்கள் மற்றும் செலவு சேமிப்புக்கள் என்பனவற்றுக்கான அங்கீகாரத்தையும் கொண்டுள்ளது.

# ஒப்பிடமுடியாத சாதனைகள், புத்தாக்கம், நிலைபேறான தன்மையுடன் கால் நூற்றாண்டை பூர்த்தி செய்த Variosystems Sri Lanka



இலங்கையில் 25 ஆண்டுகால ஒப்பிட முடியாத சிறப்பான சேவையுடன் சிறந்து விளங்கும் Variosystems, அதன் அர்ப்பணிப்பைக் குறிக்கும் வகையில், படல்கமவில் அமைந்துள்ள அதன் 3ஆவது அதிநவீன உற்பத்தி நிலையத்தின் திறப்பை பெருமிதத்துடன் அறிவிக்கிறது. இந்த மைல்கல்லானது, புத்தாக்கம், நிலைபேறான தன்மை மற்றும் செயற்பாட்டுச் சிறப்பு ஆகியன தொடர்பான நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த திறப்பு விழாவில் கருத்து வெளியிட்ட, Variosystems நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி Stephan Sonderegger, “படல்கம உற்பத்தி நிலையமானது எமது தூரநோக்கின் மையப் பகுதியாகும். உள்ளூர் விநியோகச் சங்கிலிகள், போட்டி விலைகள் மற்றும் உலகளாவிய தரங்களுடன், சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு நாம் ஆதரவளிக்க விரும்புகிறோம். 'முன்னணி புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களை இணைந்து உருவாக்குதல்' எனும் எமது குறிக்கோளுக்கு அமைவான இந்த வசதி விரிவாக்கத்தின் மூலம், வளர்ந்து வரும் ஆசிய சந்தையிலும் உலகளாவிய இலத்திரனியல் விநியோக சங்கிலியிலும் எமது இருப்பை வலுப்படுத்துகிறோம்.” என்றார்.

Variosystems Sri Lanka வின் புதிய அதி நவீன கட்டடமானது, உற்பத்தி திறன்களில் ஒரு முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது. படல்கமவில் அமைந்துள்ள இந்த அதிநவீன தொழிற்சாலையானது, 30,000 சதுர மீற்றர் பரப்பளவில், நிறுவனத்தின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக மாற்றுகிறது. இந்த விரிவாக்கமானது, சுவிட்சர்லாந்தில் உள்ள Steinach தலைமையகத்துடனான உலகளாவிய இலத்திரனியல் சேவை பங்குதாரராக Variosystems இன் நிலையை உறுதிப்படுத்துகிறது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்த தொகுதியானது, முற்றாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தியால் இயக்கப்படுவதன் மூலம் புதிய தொழில்துறை அளவுகோல்களை ஏற்படுத்தியுள்ளது. மேம்பட்ட தொழில்நுட்ப ஒருங்கிணைப்பானது, அதிகரித்த திறன் மற்றும் குறைந்த உற்பத்தி நேரத்தை உறுதி செய்கிறது. குறைந்த கழிவு வெளியேற்றத்துடன் அதிகரித்த உற்பத்திக் கொள்கைகளுக்கு இணங்கும் இதன் கட்டட வடிவமைப்பானது, செயன்முறைகளை நெறிப்படுத்துவதோடு, தொழிற்பாட்டு செயற்றிறனை அதிகரிக்கிறது.

# ஆரம்ப வெற்றியாளர்களை ஈர்க்கும் செலிங்கோ லைஃப் குடும்ப சவாரி மெகா ஊக்குவிப்புத் திட்டம்



முழுக் குடும்பமும் வெளிநாட்டிற்குப் பயணம் செய்வதென்பது பலருக்குக் கட்டுப்படியான விடயமல்ல, ஆனால் செலிங்கோ லைஃப் காப்புறுதிதாரர்களின் ஐந்து குடும்பங்கள் முன்னணி ஆயுள் காப்புறுதி நிறுவனமான செலிங்கோ லைஃப்பின் முழு செலவில் மலேசியாவில் விடுமுறை கழிக்கும் வாய்ப்பை பெற்றுள்ளன.

ஹட்டன், ராகம, நுகேகொட, மஹரகம மற்றும் மத்துகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஐந்து குடும்பங்கள், செலிங்கோ லைஃப் ‘குடும்ப சவாரி’ மெகா ஊக்குவிப்புத் திட்டத்தின் 17ஆவது பதிப்பிற்காக நடத்தப்பட்ட குலுக்கலில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது வெளிநாட்டு விடுமுறை வெற்றியாளர்களாகும். மேலும் 100 குடும்பங்கள் பண்டாரகமவில் உள்ள பேர்ல் பே தீம் பூங்காவிற்கு ஒரு நாள் விஜயத்திற்காக அதே குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

17 ஆவது குடும்ப சவாரியானது குடும்பத்திற்கு வெளிநாட்டு விடுமுறைகள் திரும்புவதை இந்த வருடாந்த களியாட்டத்தின் கீழ் முக்கிய விசுவாச வெகுமதியாகக் குறிக்கிறது, உள்ளூர் ஆயுள் காப்புறுதித் துறையில் இது மிகப் பெரிய வாடிக்கையாளர் விசுவாச ஊக்குவிப்பாகும்.

இந்த ஆண்டு குடும்ப சவாரி ஊக்குவிப்பானது, செலிங்கோ லைஃப் மீதான விசுவாசத்திற்காக மொத்தம் 265 காப்புறுதிதாரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு வெகுமதி அளித்துள்ளது. இந்த மெகா ஊக்குவிப்பு திட்டத்தின் ஊடாக இன்று வரை 35,000 பேருக்கு மேல் இவ்வாறு வெகுமதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முந்தைய குடும்ப சவாரி விளம்பரங்களில் பெரும் பரிசு பெற்ற குடும்பங்கள் ஆஸ்திரேலியா, இத்தாலி, இங்கிலாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளன, மற்ற வெற்றியாளர்கள் சீனா, துபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளனர்.

குடும்ப சவாரி விளம்பரமானது அதன் பிரபல பிராண்ட் தூதர்களான பிரபல நடிகர் ரோஷன் ரணவனா மற்றும் அவரது மனைவி குஷ்லானி ஆகியோரால் ஆதரிக்கப்படுகிறது.

# மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெடின் புதிய கிளை பிலியந்தலையில் ஆரம்பம்



இலங்கையில் வங்கி அல்லாத நிதியியல் சேவைகள் துறையில் முன்னணி செயல்பாட்டாளரான மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட், மற்றுமொரு கிளையை சமீபத்தில் பிலியந்தலையில் ஆரம்பித்து வைத்து, தனது கிளை வலையமைப்பு விஸ்தரிப்பு முயற்சியை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இலக்கம் 64/1, ஹொறணை வீதி, பிலியந்தலை என்ற முகவரியில் இப்புதிய கிளை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் அதன் 31 ஆவது கிளையாக அமைந்துள்ள இது, மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் மற்றுமொரு சாதனை இலக்காக மாறியுள்ளது.

இலங்கையில் பரந்துபட்ட சமூகங்கள் மத்தியில் வளர்ச்சிக்கு வித்திட்டு, அவர்கள் அணுகக்கூடிய வகையில் நிதியியல் தீர்வுகளை வழங்க வேண்டும் என்ற மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட்டின் அர்ப்பணிப்பை இந்த மூலோபாய விஸ்தரிப்பு நடவடிக்கை பிரதிபலிக்கின்றது. தான் சேவைகளை வழங்குகின்ற மக்களுக்கு அருகில் சென்று தனது நிதியியல் சேவைகளை வழங்க வேண்டும் என்ற மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட்டின் இலக்கிற்கு அமைவாக, அதன் கிளை வலையமைப்பில் தற்போது பரபரப்புடன் இயங்கும் ஒரு வர்த்தக புறநகரமான பிலியந்தலையில் ஆரம்பித்து இப்புதிய கிளையும் இணைந்துள்ளது. பணிப்பாளர் சபையின் பிரதித் தலைவர் திரு. அரவிந்த டி சில்வா அவர்கள் இவ்விஸ்தரிப்பு நடவடிக்கை குறித்து மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, தனது கருத்துக்களை பகிர்ந்து கொள்கையில், “வலுவூட்டுதல் மற்றும் பகிரப்பட்ட சுபீட்சம் என்பதை நோக்கியே எமது பயணம் அமைந்துள்ளது. பிலியந்தலையில் திறக்கப்பட்டுள்ள எமது புதிய கிளையானது இலங்கை மக்கள் அனைவருக்கும் பிரகாசமான நிதியியல் எதிர்காலத்தைத் தோற்றுவிப்பதில் நாம் கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பிற்கு சான்றுபகருகின்றது. பிலியந்தலை ஒரு முக்கியமான புறநகரமாகவும், வணிகம் மற்றும் கைத்தொழிலுக்கான மையமாகவும் காணப்படுகின்றது.” என்று குறிப்பிட்டார்.

தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

பண்டிகைக் காலத்தில்

# Accelerate டெபிட் கார்ட் உரிமையாளர்களுக்கு பலதரப்பட்ட சலுகைகளை வழங்கும் செலான் வங்கி



செலான் வங்கி தனது Seylan Accelerate உரிமையாளர்களுக்கு பலதரப்பட்ட விசேட நலன்கள் மற்றும் சலுகைகளை அறிவித்தது. வாடிக்கையாளர்களின் நிதிசார் நலனுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இச்சலுகைகளை 2023 டிசம்பர் 31 வரை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆர்வமுள்ள தொழில் வல்லுநர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், CESP மற்றும் Suite Partway கற்கைநெறிகளில் இணையும் முதல் 20 மாணவர்களுக்கு 100 வீத பிரத்தியேக வகுப்புகளுக்கான கட்டணக் கழிவை பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் வழங்குகின்றது. இதனால் Seylan Accelerate டெபிட் கார்ட் உரிமையாளர்கள்; தங்கள் சிறப்பு முகாமைத்துவ கணக்கீட்டுத் தகைமைகளை எவ்வித நிதி நெருக்கடியுமின்றி பெற்றுக்கொள்ள முடியும். மேலும், Business Management School (BMS) தனது வணிக முகாமைத்துவ HND, முகாமைத்துவ பட்டதாரி டிப்ளோமாக்கள் மற்றும் முகாமைத்துவ நிறைவேற்று சான்றிதழ்கள் என்பவற்றுக்கு 10வீதம் முதல் 15வீதம் வரை கட்டணக் கழிவுகளை வழங்கி வருகிறது. அதேநேரம், West of England பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் முதுமானி மற்றும் இளமானி; கற்கைநெறிகளை வழங்கும் Bristol நிறுவகம், கணக்கீடு மற்றும் நிதியியில்MBA/MSc, LLM in Commercial Law, IBM (Topup), மற்றும் ஆரம்பக் கற்கைநெறிகளுக்கு ரூ.50,000 முதல் ரூ.190,000 வரை கட்டணக் கழிவுகளைப் பெற்றுத் தருகின்றது. இவற்றுடன்Seylan Accelerate இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்துடன் இணைந்து அனைத்து SLIM கற்கைநெறிகளுக்கான புதிய பதிவுகளுக்கும் 10வீத கட்டணக் கழிவை வழங்கி, அன்புடன் அரவணைக்கும் வங்கி என்ற வகையில் புதிய தலைமுறை சந்தைப்படுத்துனர்களுக்கு ஆதரவு வழங்குகின்றது.

அத்துடன் Seylan Accelerate தரமான எழுதுபொருட்களை நாடுபவர்களுக்கு சிறந்த ஒரு சலுகையைப் பெற்றுத்தந்திட Promote உடன் கூட்டிணைந்துள்ளது. இப்பொழுது வாடிக்கையாளர்கள் அத்தியாவசிய அலுவலகப் பொருட்கள் முதல் கவர்ச்சியான காகிதாதிகள் வரை அனைத்து Promote தயாரிப்புகளுக்கும் 20வீதம் வரை விலைக்கழிவை அனுபவிக்கலாம். மேலும், இந்த கூட்டிணைவானது நாடு முழுவதும் இலவச விநியோகத்தை வழங்கி சௌகரியத்தின் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது எனலாம்.

# உள்ளூர் சமூகங்களுக்கு உதவிக்கரம் நீட்டும் Lanka Spice



இலங்கையின் புகழ்பெற்ற வர்த்தக நிறுவனமான Lanka Spice (Pvt) Ltd, 'Senehase Dath' (அன்பின் கரங்கள்) எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் சமூகப் பொறுப்புணர்வை நோக்கி ஒரு குறிப்பிடத்தக்க படியை எடுத்துள்ளது. கல்வியை ஆதரிப்பதில் விசேட கவனம் செலுத்தி, சமூகத்திற்கு அர்த்தமுள்ள வழிகளில் மீளக் கொடுப்பதில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை இந்த திட்டம் பிரதிபலிக்கிறது.

'Senehase Dath' நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வானது, அண்மையில் அத்துருகிரிய, மே.மா / ஜயா / மகாமத்திய வித்தியாலயத்தில் இடம்பெற்றது. Mc Currie நிர்வாகம், பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து, தரம் 6 முதல் 9 வரையிலான தகுதியான மாணவர்கள் குழுவை அடையாளம் கண்டு, இந்த மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் பயணத்தை எளிதாக்கும் வகையில், அத்தியாவசிய கற்கைக்கான பொருட்கள் அடங்கிய, தொகுக்கப்பட்ட பரிசுப் பொதிகளை வழங்கியது.

# நவலோக மருத்துவமனையின் வருடாந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



நவலோக மருத்துவமனை குழுமத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்ட நத்தார் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக அண்மையில் நிறைவடைந்தன. வருடாந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் முதற்கட்டமாக கிறிஸ்மஸ் கேக் கலவை அண்மையில் தயாரிக்கப்பட்டதுடன், டிசம்பர் மாத தொடக்கத்தை முன்னிட்டு வைத்தியசாலை வளாகம் முழுவதும் கிறிஸ்மஸ் அலங்காரங்கள் மற்றும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நவலோக மருத்துவமனையில் வருடாந்த கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் கிறிஸ்மஸ் கரோல் இசைக் கச்சேரி 3 நாட்கள் இடம்பெற்றதுடன் கடைசி இசை நிகழ்ச்சி டிசம்பர் 15 ஆம் திகதி நவலோக வைத்தியசாலையின் முகப்பில் இடம்பெற்றது. இதில் நவலோக மருத்துவமனை குழுமத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் நவலோக வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவ மனையில் பங்குபற்றும் சிறார்களுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவினால் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஏறக்குறைய 50 சிறுவர்கள் கலந்துகொண்டதுடன் இந்நிகழ்வில் பங்குபற்றிய சகல சிறார்களுக்கும் உணவு மற்றும் பானங்கள் வழங்கப்பட்டன. நவலோக வைத்தியசாலையின் வருடாந்த கிறிஸ்மஸ் வேலைத்திட்டம் தொடர்பில் மருத்துவமனை குழுவின் தலைவர் டொக்டர் ஜயந்த தர்மதாச கருத்து தெரிவிக்கையில்.

“வருடாந்திர கிறிஸ்மஸ் நிகழ்வு நவலோக மருத்துவமனையின் ஒரு அங்கமாகும், மேலும் எங்கள் ஊழியர்கள் கோவிட் காலத்தைத் தவிர ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து வருகின்றனர். அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கிறிஸ்மஸ் கரோல்கள் மற்றும் பிற கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் மூலம், நோயாளிகளுக்கு மன மகிழ்ச்சியை அளிக்க முடிகிறது." என கூறினார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 12ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 12


### குறள் தரும் சிந்தனை



கற்றதனால் ஆய பயன்னென்கொல் வாலறிவான்
நற்றாள் தொழாஅர் எனின்

*தூய அறிவு வடிவானவனின் திருவடிகளை வணங்காதவர், படித்ததனால் பெற்ற பயன்தான் என்ன?*

## இலங்கையில் தாக்கம் செலுத்துமா கொவிட் 19 தொற்றின் புதிய திரிபு?

*உலகின் சில நாடுகளில் கொவிட் 19 தொற்றும் அதன் பிறழ்வுகளும் மீண்டும் பதிவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக இலங்கைக்கு அருகிலுள்ள இந்தியாவின் சில மாநிலங்களிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*குறிப்பாக கொவிட் 19 தொற்றில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள ஒமிக்ரோன் பிறழ்வும் அதில் ஏற்பட்டுள்ள புதிய திரிபும் தற்போது பதிவாகக்கூடிய நிலையை அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மாநிலங்களிலும் கூட இத்தொற்று பதிவாகி வருகின்றன. அத்தோடு சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இத்தொற்றுக்கள் பதிவாகும் நிலைமையை அடைந்துள்ளன.*

*இவ்வாறான சூழலில் இலங்கையின் சுகாதாரத் துறையினர் கொவிட் 19 தொற்றும் அதன் புதிய பிறழ்வுகளும் மீண்டும் தலைதூக்கி வருவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.*

*இந்தப் பின்புலத்தில் இந்நாட்டில் கொவிட் 19 தொற்றின் ஜே.என்.1 என்ற புதிய திரிபு பரவுவதற்கான அபாயம் குறித்து மதிப்பீடு செய்வதற்கான மரபணு சோதனைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. அதற்கு ஏற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*

*கடந்த சில மாதங்களாக நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் கொவிட் 19 தொற்றாளர்கள் மிகவும் குறைந்த அளவில் தான் அடையாளம் காணப்பட்டனர். ஆனாலும் தற்போது பிராந்திய நாடுகளில் இத்தொற்றுக்கள் மீண்டும் தலைதூக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள பின்னணியில் கடந்த சில நாட்களாக விசேட கவனம் செலுத்தி தொழில்நுட்ப அறிவுறுத்தல்களுக்கு அமைய முக்கிய வைத்திய சாலைகளில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அந்த மாதிரிகள் எதிலும் கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் இத்தொற்று இலங்கையில் பரவுவதற்கான ஆபத்து குறைவு என்று தெரிவிக்கப்படுகிறது.*

*ஆனாலும் சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹீபால, 'கொவிட் 19 தொற்று மற்றும் ஒமிக்ரோன் பிறழ்வில் ஏற்பட்டுள்ள புதிய வகை திரிபான ஜே.என்.1 என்பன நாட்டுக்குள் பதிவானாலும் அதனைக் கையாளுவதற்கு தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டிலுள்ள 19 பிரதான வைத்தியசாலைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன.*

*இவ்வாறான சூழலில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்ப்பீடனம் மற்றும் நேயெதிர்ப்பு கற்கை பீடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவேந்திர, பொதுமக்கள் முகக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.*

*ஆனால் இந்தியாவின் சில மாநிலங்களிலும், சிங்கப்பூரிலும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.*

*ஏனெனில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சீனாவின் வூஹான் நகரில் கண்டறியப்பட்ட இந்த கொவிட் 19 தொற்று குறுகிய காலப்பகுதிக்குள் உலகம் முழுவதும் பரவியது. அதன் தாக்கங்களும் பாதிப்புக்களும் முழு உலகிற்குமே சவாலாகின. உலகில் 70 கோடிக்கும் மேற்பட்டோரை இற்றை வரையும் பாதித்துள்ள இவ்வைரஸ் 69 இலட்சத்துக்கும் மேற்பட்டோரின் உயிர்களைக் காவு கொண்டுள்ளது. இலங்கையிலும் கூட 6 இலட்சத்து 72 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைப் பாதித்துள்ள இவ்வைரஸ், 16 ஆயிரத்து 800 க்கும் மேற்பட்டோரின் மரணங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளன.*

*அண்மைக்கால வரலாற்றில் இவ்வாறு மிக மோசமான பாதிப்புக்களையும் தாக்கங்களையும் மனித சமூகத்திற்கு இத்தொற்று ஏற்படுத்தியுள்ளது. இத்தொற்றினால் முழு உலகமும் அச்சம் பீதியில் உறைந்திருந்தன. மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர்.*

*என்றாலும் இத்தொற்றின் தாக்கங்களைப் பலவீனப்படுத்துவதற்கான தடுப்பூசி கண்டுபிக்கப்பட்டு புழக்கத்திற்கு வந்த பின்னர் இவ்வைரஸின் செல்வாக்கும் பாதிப்புக்களும் பலவீனமடைந்தன. ஆனாலும் இத்தொற்று அவ்வப்போது திரிபுகளுக்கு உட்பட்டு தலைதூக்கிய போதிலும் அவையும் அதிக தாக்கங்களை ஏற்படுத்த முடியாத நிலையில் உள்ளன.*

*ஆனாலும் இத்தொற்றின் ஒமிக்ரோன் பிறழ்வில் ஏற்பட்டுள்ள ஜே.என்.1 என்ற புதுவகை திரிபு உலகின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. ஆகவே தற்போதைய சூழலில் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையில் செயற்படுவது மிகவும் அவசியம். குறிப்பாக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகளை நன்கு கழுவிக் கொள்ளுதல் ஆகியன இத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களாகும். அவற்றின் ஊடாக கொவிட் 19 தொற்றின் புதிய திரிபுகளும் செல்வாக்கு செலுத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தலாம். அதுவே இப்போதைய தேவை. அதற்கு ஏற்பட செயற்படுவது மக்களின் பொறுப்பாகும்.*

editor.tkn@lakehouse.lk

# இலங்கையின் கலாசார, உணவு பாரம்பரியங்களை சவுதி பல்கலைக்கழகத்தில் வெளிப்படுத்திய கண்காட்சி

சவுதி அரேபியாவின் அல் இமாம் முஹம்மத் இப்னு ஸஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெறும் இலங்கை மாணவர்கள் தங்கள் நாட்டின் பொருளாதாரம், பாரம்பரிய உணவு, ஆடை பழக்கவழக்கங்கள், கலாசார விழுமியங்களை வெளிப்படுத்தும் கண்காட்சியொன்றை பல்கலைக்கழக வளாகத்தில் வெகு சிறப்பாக நடாத்தியுள்ளனர். உலக மாணவர் தினத்தையொட்டி சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதரகத்தின் ஒத்துழைப்புடன் இக்கண்காட்சி நடாத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மாணவர்கள் தங்கள் நாட்டிலுள்ள பல்லைக்கழகங்களில் உயர்கல்வி பெறவென சவுதி அரேபியா வருடா வருடம் புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது. அந்த வகையில் புலமைப்பரிசில் பெற்று அல் இமாம் பல்கலைக்கழகத்தில் கல்வி பெறும் இலங்கை மாணவர்கள் இக்கண்காட்சியை ஏற்பாடு செய்து நடாத்தினர்.

இலங்கையின் கலாசார, பாரம்பரிய விழுமியங்கள், உணவு பழக்கவழக்கங்கள், ஆடை ஒழுங்குகள், பொருளாதாரம், சுற்றுலாத்துறை உள்ளிட்டவற்றை சவுதி மக்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இலங்கையானது மத்திய கிழக்கில் வாழும் அரேபியர்கள் உட்பட உலக மக்களைக் கவர்ந்திழுக்கும் அழகியதொரு தீவாகும். இலங்கையை அரபியர் "பூமியில் உள்ள அல்லாஹ்வின் சுவர்க்கம்" என்று வர்ணிப்பது வழமையாகும். அந்தளவுக்கு பெருமை பெறும் இத்தேசம் நாலா பக்கமும் கடலால் சூழப்பட்டு, பயிர்ச் செய்கை நிலங்களாலும், வனப் பிரதேசங்களாலும் பசுமையாகக் காட்சியளிக்கிறது. பசுமையால் பெருமை பெற்றுள்ள நாடு இது.

இப்பின்புலத்தில் உலகின் பல பாகங்களில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர். அதனால் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பு நல்கும் துறையாக சுற்றுலா விளங்குகிறது.

எனவே மத்திய கிழக்கு நாடுகளின் குறிப்பாக சவுதி அரேபியாவின் சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு மேலும் கவர்ந்திழுக்க இக்கண்காட்சி பெரிதும் உதவும் என மாணவர் ஒன்றியப் பிரதிநிதியொருவர் குறிப்பிட்டார்.

இந்நாட்டின் சுற்றுலாத்துறையை வலுப்படுத்தும் நோக்கில் சுற்றுலாத்துறை சம்பந்தமான காட்சிகளும் குறிப்பாக முக்கிய சுற்றுலா தளங்களை உள்ளடக்கியதான காணொளிகளும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன. குறிப்பாக இந்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தென்னையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள், தேயிலை உள்ளிட்ட ஏனைய பொருட்களும் கூட காட்சிக்கு வைப்பட்டிருந்தன. இக்கண்காட்சியின் ஊடாக இலங்கை மாணவர்கள் தங்கள் நாட்டின் மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்துள்ளனர்.

இலங்கை குறித்த இக்கண்காட்சியை அல் இமாம் பல்கலைக்கழகத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்து தந்த பல்கலைக்கழக முதல்வர் பேராசிரியர் அஹ்மத் இப்னு ஸாலிம் அல்ஆமிரிக்கும் ஏற்பாட்டுக் குழுவுக்கும் இலங்கை மாணவர்கள் சார்பாக நன்றிகளும் பாராட்டுதல்களும் தெரிவிக்கப்பட்டதோடு பல்கலைக்கழக முதல்வருக்கு இலங்கையின் சின்னம் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இக்கண்காட்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய இலங்கைத் தூதுவருக்கும் தூதரக அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

அதேநேரம் இவ்வாறான கண்காட்சி சவுதி அரேபியாவிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களிலும் வெளிநாட்டு மாணவர்களால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டுள்ளன.





## இலங்கைத் தூதரகத்தின் ஒத்துழைப்புடன் அல் இமாம் முஹம்மத் இப்னு ஸஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் இலங்கை மாணவர்களது ஏற்பாடு





சவுதி அரேபியாவானது வெளிநாட்டு மாணவர்கள் தம் நாட்டில் உயர்கல்வியைத் தொடரவென வருடா வருடம் பெருந்தொகைப் புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது. இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்யும் வரையும் வருடா வருடம் தங்களது சொந்த நாட்டுக்கு சென்றுவர இரு வழி விமான டிக்கட்டுகள், மாணவர்களுக்கென மாதாந்த கொடுப்பனவு, தங்குமிடம், மருத்துவ வசதி, பட்டப்படிப்பு செலவு என அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இப்புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை மாணவர்கள் ரியாத்திலுள்ள அல் இமாம் முஹம்மத் பின் ஸுஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகம், மதீனாவிலுள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகம், மக்காவிலுள்ள உம்முல் குரா பல்கலைக்கழகம், அல் கஸீம் பல்கலைக்கழகம், ரியாதிலுள்ள மன்னர் ஸஊத் பல்கலைக்கழகம், நஜ்ரான் பல்கலைக்கழகம், மதீனாவிலுள்ள தைபா பல்கலைக்கழகம், ஜித்தாவிலுள்ள மன்னர் அப்துல் அஸீஸ் பல்கலைக்கழகம், தாயிப் பல்கலைக்கழகம், அல் மஜ்மஆ பல்கலைக்கழகம் போன்ற சவுதி அரேபிய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

சவுதி அரேபியாவில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் அல் இமாம் முஹம்மத் பின் ஸுஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகம் மிகப் பெரிய பல்கலைக்கழகமாகும். அப்பல்கலைக்கழகம் உலகமெங்கிருந்தும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இலவசமாக புலமைப்பரிசில்கள் வழங்கி பல துறைகளில் மாணவர்களை ஊக்குவிக்கிறது. அப்பல்கலைக்கழகத்தில் இலங்கையைச் சேர்ந்த பல மாணவர்கள் தங்களது கல்வியை நிறைவு செய்து பட்டம் பெற்றுள்ளனர். தற்போதும் சுமார் 13 மாணவர்கள் உயர்கல்வி பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே இலங்கை குறித்து நடாத்தப்பட்டுள்ள இக்கண்காட்சி இந்நாட்டுக்கு பெரிதும் நன்மை பயப்பதாக அமையும் என்றால் அது மிகையாகாது.


**இலங்கை மாணவர் ஒன்றியம்**
அல் இமாம் முஹம்மத் பின் ஸுஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகம், ரியாத், சவுதி அரேபியா


# சிவனொளிபாதமலை யாத்திரை காலம் ஆரம்பம்

சிவனொளிபாதமலை யாத்திரைக்கான பருவகாலம் பூரணை தினமான நேற்று (26) ஆரம்பமாகியது. கடல் மட்டத்திலிருந்து 7,359 அடி உயரமான கூம்பு வடிவிலான இம்மலை, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களுக் கிடையிலான எல்லையிலுள்ளது. மலை உச்சியில் காணப்படும் 1.8 மீற்றர் அளவான பாறை அமைப்பு கௌதம புத்தரின் காலடி சுவடாக பௌத்தர்களாலும் சிவனின் காலடி சுவடாக இந்துக்களாலும் ஆதாமின் காலடி சுவடாக இஸ்லாமியர்களாலும் கருதப்படுகிறது.



சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பித்தை தொடர்ந்து இரத்தினபுரி, பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி வழியாக மலை உச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக சிவனொளிபாதமலை நாயக்கதேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்தார்.

இரத்தினபுரி – அவிசாவளை மற்றும் ஹட்டன் – நல்லதண்ணியூடாக ஒரு ஊர்வலமும் இரத்தினபுரி – பலாபத்தல வீதியால் மற்றைய ஊர்வலமும் தெய்வீக ஆபரணங்களை ஏந்திய மூன்றாவது ஊர்வலம் பெல்மதுளை – ஓப்பநாயக்க, பலாங்கொடை, பின்னவல, பொகவந்தலாவையூடாக சிவனொளிபாதமலையை அடைந்தது.

சிவனொளிபாதமலைக்கு வரும் யாத்திரிகர்களின் நலன் கருதியும் அவர்களின் பாதுகாப்பையிட்டும் நல்லதண்ணீர் நகரிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு மேலதிகமாக சீத்தகங்குலதன்ன, இந்திக்கட்டுபான, மழுவ ஆகிய இடங்களில் தற்காலிக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

அத்துடன், ஹட்டன் நல்லதண்ணீர் ரயில் இணைப்பு பஸ்சேவை ஹட்டன் டிப்போவால் நடத்தப்படுவதுடன், இரத்தினபுரி மற்றும் ஹட்டன் வழியாக சிவனொளிபாதமலைக்கான யாத்திரையை மேற்கொள்ள முடியும். மது அருந்தவோ எந்தவித இசைக்கருவிகளை கொண்டு செல்லவோ முடியாதென பொலிஸார் தெரிவித்தனர்.


**ஜி.கே. கிஷாந்தன்**
ஹற்றன் சுழற்சி நிருபர்


# இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதில் சட்டரீதியான விரிவான ஏற்பாடுகள்

பெண்கள் அடிமையாய் இருந்த காலம் போய் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் பெண்கள் கிளர்ந்து தமது உரிமைகளை வென்றெடுக்க பல்வேறு போராட்டங்களையும் உயிர்த் தியாகங்களையும் செய்து வந்தனர்.

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் என்பன வீடுகள், தொழில் நிலையங்கள், பொதுப் போக்குவரத்துகள், இணையம், சமூக வலைத்தளம் என பல வகையிலும் இடம்பெறுகின்றன. ஆணுக்கு நிகர் பெண் என பல இடங்களிலும் சம உரிமை பற்றிப் பேசினாலும் சில இடங்களில் பெண்கள் நசுக்கப்படுகின்றனர். வீடுகளை பொறுத்தவரை பெண்கள் சில ஆண்களால் பல்வேறு சொல்லொணா துன்பத்திற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி அதிகரிப்பினால் பெண்கள் அதிக நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். தமது வாழ்க்கையை கொண்டு செல்வதற்காக தம்மிடம் உள்ள நகைகள் மற்றும் சொத்துக்களை கொண்டு அடமானம் வைத்து தங்கள் குடும்பத்தை கொண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது.

இது தவிர நுண்கடன்களை பெறுவதிலும் அதிகரித்த வட்டிக்கு பணம் பெறுவதிலும் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதன் காரணமாக வட்டி கட்ட முடியாமல் கடன்காரர்கள் வீடு தேடி வருகின்றனர். பெண்கள் தமது கணவன்மாருக்கு தெரியாமல் இத்தகைய செயல்பாடுகள் மேற்கொள்வதன் காரணமாக கணவர் மற்றும் அவரின் குடும்பத்தினரால் பல்வேறு நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர்.

இன்று அதிகமான ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். இதனால் பெண்கள் வீடுகளில் தனிமையில் இருப்பது அதிகரித்துள்ளது. இதன் போது சிலர் தவறான வழிக்கும் செல்கின்றனர். அறிமுகமற்ற நபர்கள் மூலம் சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையம் ஊடாக தகாத நபர்களுடன் தொடர்பு ஏற்படுத்தி தமது அந்தரங்க தகவல்கள் புகைப்படங்கள் என்பவற்றை பகிருகின்றனர். இவற்றை அவர்கள் பணம் பெறும் நோக்கோடும் ஏனைய தேவைகளுக்காகவும் செயற்கை தொழில்நுட்ப முறை மற்றும் ஏனைய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அச்சுறுத்தி வருகின்றனர். இதன் காரணமாக பெண்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதோடு தமது பிள்ளைகளின் எதிர்காலம் குடும்ப மானம் என்பவை இழக்கப்படுவதன் காரணமாக விவாகரத்து பெறும் நிலைமையும் ஏற்படுகின்றது.





தொழில் காரணமாக வேலைக்குச் செல்லும் பல பெண்கள் தொழில் நிலையங்களில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பதவி உயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு உள்ளிட்ட சலுகைகள் அதிகம் தருவதாக கூறி உயர் அதிகாரிகளால் தவறான வழிக்கு ஈர்க்கப்படும் பெண்களும் உள்ளனர்.


இவ்வாறு சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற பாலின வன்முறைகளைக் கட்டுப்படுத்த பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாலின வன்முறைகளை குறைப்பதற்கான செயல் அணிகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வீதி நாடகங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்கு என்பன முன்னெடுக்கப்படுகின்றன.

இது தவிர பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளைப் பதிவு செய்வதற்கு 24 மணிநேர அவசரத் தொலைபேசி இலக்கம் மூலம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன. 1938 தொலைபேசி இலக்கம் மூலம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. இவை சிறந்த முறையில் விசாரிக்கப்பட்டு பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இவை தவிர பாடசாலைகளில் இளவயது திருமணம் மற்றும் அதன் தீங்கான விளைவுகள் தொடர்பாகவும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை விட சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பல்வேறு அரச அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பெண்கள் மற்றும் சிறுவர்களை பாதுகாப்பதற்கும் அவர்களை வலுவூட்டுவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் கிராம மட்டங்களில் செயற்படுத்தியுள்ளனர். இவர்களுக்குப் பக்கபலமாக பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

இது தவிர, குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வரும் பெண்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கப்படுவதோடு தமது வழக்குகளை வாதாடுவதற்கு சட்டத்தரணிகளும் நியமிக்கப்பட்டு பெண்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எமது நாட்டில் சட்ட உதவி ஆணைக்குழுவின் பங்கு விசேடமானதாகும்.

எனவே சமூகப் பொறுப்பு மிக்க ஒவ்வொருவரும் பெண்கள் விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி பெண்களை மதித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றி சமூகத்தின் விடிவுக்காய் அவர்களையும் பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு சமுதாயத்தின் விடிவுக்கான பாதையில் முன்னோக்கி செல்வோம்.




**ஏ.எம். கஸ்பியா வீவி...**
(சிறுவர் உரிமைகள், மேம்பாட்டு உதவியாளர்)
பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை

# கிழக்கின் குரல்



# அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்க அதிகளவில் நிதி ஒதுக்கீடு

**ஒலுவில் விசேட நிருபர்**

அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் விரிவான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு நினைவுதினத்தையிட்டு 'நிலையான அபிவிருத்தியின் மூலம் அனர்த்தத்துக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய சமூகத்தை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் அம்பாறை மாவட்ட பிரதான நிகழ்வு நேற்று முன்தினம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.ரீ.எம்.அன்ஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,



"மக்களின் சட்டவிரோத செயற்பாடுகளாலேயே இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்துள்ளன. கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களை குறைப்பதற்கு அரசாங்கத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

ஆயினும், எதிர்காலத்தில் அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை எதிர்கொண்டு மக்களுக்கும் தேசிய பாதுகாப்புக்கும் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும். பல்வேறு இயற்கை அனர்த்தங்களை உலக நாடுகள் எதிர்நோக்குகின்றன. இதன் காரணமாக மனித உயிர்கள், கட்டுமானங்கள், பொருளாதாரம் மற்றும் சுற்றுப்புறச்சூழலில் பாரிய அழிவை ஏற்படுத்தி, இதன் விளைவாக உலக நாடுகள் பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ளன.

இதற்கு பிரதான காரணம் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளில் அனர்த்த அபாயக் குறைப்பு, சுற்றுச்சூழல் முகாமைத்துவம், காலநிலை மாற்ற நழுவல் போக்கு போன்ற விடயங்களில் முறையாக செயற்படாமை காரணமாக அனர்த்த ஆபத்து வலுவடைந்தன் விளைவாக அனர்த்தங்கள் ஏற்படுவதுடன் இழப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

அனர்த்தத்துக்கு முன் செயற்படுத்த வேண்டிய அனர்த்தக் குறைப்பு, அனர்த்த தணிப்பு, அனர்த்த தயார்படுத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை பொறிமுறைகளை வலுப்படுத்தல் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தல் அவசியமாகும்.

அனர்த்த அபாய குறைப்பு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை அம்பாறை மாவட்டத்தில் வினைத்திறனுடன் கொண்டு செல்வதற்காக பயிற்றுவிப்பாளர்கள் சகல பிரதேச செயலகங்கள் சுகாதாரத்துறையினர் மற்றும் ஏனைய துறைகளிலும் உள்ளனர். 2019ஆம் ஆண்டு அதற்கான முழு முயற்சிகளையும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனர்த்தம் தொடர்பாக பொது மக்களுக்கு பிரதேசம் தோறும் விழிப்புணர்வு மற்றும் முன்னாயத்த செயற்பாடுகள் தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டு வருகின்றது" என்றார்.

முன்னாள் எம்.பி

# ஜோசப் பரராஜசிங்கத்தின் 18ஆவது வருட நினைவுதினம்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 18ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் (25) மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2005ஆம் ஆண்டு புளியந்தீவு முன்னாள் எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவுதின நிகழ்வில் அன்னாரின் உருவப்படத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்டோர் மலர் மாலை அணிவித்தும் நினைவுச் சுடர் ஏற்றியும் அஞ்சலி செலுத்தினர். இதன் போது, 'தமிழ்த் தேசிய அரசியலும் பெண்களும்' எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக சமூக, விஞ்ஞான மற்றும் கலை, கலாசாரப் பீடத்தின் விரிவுரையாளர் புளோரிடா சிமியோன் நினைவுப் பேருரையாற்றியதுடன், அவர் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் சுனாமி தின நிகழ்வுகள்







சுனாமிப் பேரலை ஏற்பட்டு 19ஆவது வருட பூர்த்தியையொட்டி கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சுனாமிதின நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்டன.

இதன்போது சுனாமியால் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து தீபச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், உயிரிழந்தோரின் ஆத்மசாந்திக்காக மும்மத மதகுருமார்களின் பங்குபற்றுதலுடன் பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன.

திருகோணமலையில் தமிழர் பேரவையால் சுனாமி தின நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டதுடன், இதில் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் சண்முகம் குகதாசன் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து சுடர் ஏற்றினார்.

கிண்ணியா நகர சபையின் தோனா சிறுவர் பூங்காவில் சுனாமியால் உயிரிழந்தோருக்காக அமைக்கப்பட்ட நினைவுதூபியிலும் கிண்ணியா கடற்கரையிலும் சுனாமிதின நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, மட்டக்களப்பு நகரில் 4 சுனாமி நினைவிடங்களில் சுனாமிதின நிகழ்வுகள் நடைபெற்றதுடன், திருச்செந்தூர் மற்றும் டச்பார் நினைவிடங்களில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா பொதுச்சுடர் ஏற்றி உயிரிழந்தோருக்கு ஆத்மசாந்தி ஆராதனை நடத்தினார். இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி செயலாளர் பூ.பிரசாந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காத்தான்குடி பிரதேச செயலகத்திலும் பாசிக்குடா கடற்கரையிலும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலும் சுனாமிதின நிகழ்வுகள் நடைபெற்றன.

அம்பாறையிலும் திருக்கோவில் 02 சுப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் சுனாமிதின நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். கல்முனை மற்றும் காரைதீவிலும் சுனாமிதின நிகழ்வுகள் நடைபெற்றன.

**றொட்டவெவ குறூப், தம்பலகாமம் குறூப், திருக்கோவில் தினகரன், மட்டக்களப்பு மாவட்ட விசேட, புதிய காத்தான்குடி தினகரன், பாசிக்குடா, கிண்ணியா மத்திய, பாண்டிருப்பு தினகரன், கல்லடி குறூப், மட்டக்களப்பு குறூப், காரைதீவு குறூப், பெரியநீலாவணை விசேட, பாண்டிருப்பு, மட்டக்களப்பு சுழற்சி, மணல்சேனை நிருபர்கள்**

# 'சுனாமி பேபி' அவரது இல்லத்திலுள்ள நினைவு தூபியில் அஞ்சலி

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



சுனாமி பேபி என அழைக்கப்படும் அபிலாஷ் அவரது இல்லத்தில் அமைந்துள்ள நினைவுதூபியில் அஞ்சலி செலுத்தினார்.

சுனாமியால் கிழக்கு மாகாணம் மிகவும் பாதிக்கப்பட்ட போது கடந்த 2004.12.26 அன்று சுனாமியால் காணாமல் போய் பின்னர் வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட அபிலாஷ் குழந்தையாக இருந்த நிலையில் அக்குழந்தைக்கு 9 தாய்மார்கள் உரிமை கோரினர்.

இந்நிலையில், அப்போதிருந்து சுனாமி பேபி என அழைக்கப்பட்டு வரும் அபிலாஷ், மரபணு பரிசோதனையின் மூலம் மட்டக்களப்பு குருக்கள்மடத்தைச் சேர்ந்த ஜெயராசா தம்பதியின் குழந்தை என உறுதிப்படுத்தப்பட்டு பின்னர் அக்குழந்தை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

தற்போது 19 வயதுடைய அபிலாஷ், தனது இல்லத்தில் சுனாமியால் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து நினைவுதூபி வைத்துள்ளதுடன், சுனாமியால் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து ஒவ்வொரு வருடமும் அஞ்சலி செலுத்தி வருகின்றார்.

நேற்றையதினமும் தனது பெற்றோருடன் அவரது இல்லத்திலுள்ள நினைவுதூபியில் அவர் அஞ்சலி செலுத்தினார்.

சுனாமியால் உயிரிழந்த அனைத்து உறவுகளுக்கும் தாம் இந்த வேளையில் அஞ்சலி செலுத்துவதாகவும் இம்முறை கல்விப் பொதுத்தர உயர்தரப் பரீட்சையை தான் எழுதவுள்ளதாகவும், பின்னர் தனது உயர் கல்வியை வெளிநாட்டில் தொடர்வதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அபிலாஷ் தெரிவித்தார்.

காத்தான்குடியில்

# 'நிதரிசனமும் நிம்மதியும்' கவிதை நூல் வெளியீட்டு விழா

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



கவிஞரும் ஓய்வுநிலை ஆசிரியருமான எம்.எம்.அமீர் அலி எழுதிய 'நிதரிசனமும் நிம்மதியும்' எனும் தலைப்பில் கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி மத்திய கல்லூரி பரீட் மண்டபத்தில் நடைபெற்றது.

விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம்.பைறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி எம்.ஏ.எம்.ஹக்கீம் நூல் அறிமுகவுரையை நிகழ்த்தினார். காத்தான்குடி பிஸ்மி நிறுவனத்தின் தவிசாளர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.பிர்தௌஸ் நூலாசிரியர் அறிமுகவுரையை நிகழ்த்தியதுடன், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசாரப்பீட ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவின் துறைத்தலைவரும் சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளருமான கலாநிதி எம்.ஐ.பௌசுல் கரீமா வாழ்த்துரை நிகழ்த்தினார். இந்த நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் உலமாக்கள் பிரமுகர்கள் ஆசிரியர்கள் முக்கியஸ்தர்கள் கலை இலக்கியவாதிகள் இவரிடம் கல்வி கற்ற பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நூலாசியர் மற்றும் அவரது மனைவி ஆகியோருக்கு நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# ஐஸ் போதைப்பொருள்; அம்பாறையில் 8 பேர் கைது

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

அம்பாறையில் பாரியளவான ஐஸ் போதைப்பொருளை கொண்டுவந்து விற்பனை செய்த சந்தேகநபர் ஒருவர் உட்பட 7 சந்தேகநபர்கள், அம்பாறை தலைமையகப் பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் விற்பனை செய்த சந்தேக நபரிமிருந்து சுமார் இருபது இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக அம்பாறை பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகருக்கு ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய விசேட சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன்போது, போதைப்பொருளை பெற்றுக் கொள்ள வந்த 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# மூதூர் பிரதேச செயலக கலாசார விழா

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச செயலகத்தால் இவ்வருடத்துக்காக நடத்தப்படும் பிரதேச கலைஞர்கள் கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதேச கலைஞர்கள் மற்றும் சிரேஷ்ட கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். அத்துடன் கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக கலந்து கொள்வார்.

# கிண்ணியா பிரதேச கலை இலக்கிய விழா





**கிண்ணியா மத்திய நிருபர்**

2023ஆம் ஆண்டுக்கான கிண்ணியா பிரதேச கலை இலக்கிய விழா, கிண்ணியா பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் கிண்ணியா பிரதேச செயலகத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது பாரம்பரிய கலை, கலாசார இலக்கிய நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக கலாபூஷணம் பெற்ற எழுத்தாளர்களான பி.ரீ.அஸீஸ், அ.கௌரிதாசன், ஐதுரூஸ் ஏ.ஹசன், கலாநிதி கே.எம்.எம்.இக்பால் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், அரங்கேற்றப்பட்ட படைப்புகளுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# வரலாற்று விழுதுகள் அமைப்பால் மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் 2023ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வும் களுவாஞ்சிக்குடி அன்னை இல்லம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வரலாற்று விழுதுகள் அமைப்பின் அனுசரணையுடன் அதன் தலைவர் த.ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, வரலாற்று விழுதுகள் அமைப்புக்கான ரீசேட் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை செயலாளர் மூ.கோபாலரெத்தினம் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# இரணைமடுக்குள நீர் வெளியேற்றம் காரணமாக நெற்பயிர்கள் அழிவு



நாட்டில் நிலவி வரும் சீரற்ற கால நிலை காரணமாக இரணை மடுக் குளத்தின் வான் கதவுகள் மூலம் மேலதிக நீர் திறந்து விடப்பட்டு அதிக அளவான நீர் வெளியேற்றப்பட்டதனால் இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள தாழ்நில பகுதிகளான பண்ணங்கண்டி, முரசுமோட்டை, ஐய்யன் கோவிலடி, பழைய வட்ட கட்சி, கண்டாவளை போன்ற பகுதிகள் ஒரு வார காலத்துக்கு மேலாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இப் பகுதிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள ஒவ்வொரு விவசாயும் ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 300 ரூபாய்க்கும் மேற்பட்ட நட்டத்தினை எதிர்கொண்டுள்ளனர்.

இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாண்டுக்குரிய காலப்போக நெற் செய்கையில் சுமார் எண்ணாயிரம் ஏக்கருக்கும் கூடுதலான நெல் வயல்கள் நீரில் மூழ்கியதால் பகுதியளவிலும் முழுமையாகவும் அழிவடைந்துள்ளன.

## வடக்கின் உதயம்

# வடக்கில் உருளைக் கிழங்கு பயிர் செய்கைக்கு மானியம் கோரல்

வடக்கில் அடுத்த பருவ காலத்தில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையை சுமார் 150 ஹெக்ரேயரில் மேற்கொள்வதற்கு 50 வீத மானியத்தினை பெற்றுத் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த வருடம் நவீன மயப்படுத்தப்பட்ட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், வடக்கு விவசாயிகளுக்காக எடுத்துவரப்பட்ட சுமார் 21000 கிலோ உருளைக் கிழங்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் இது தொடர்பாகவும் இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாது எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் தேசிய பாதுகாப்பு தினம் யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சூரியராஜா தலைமையில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பருத்தித்துறை விசேட நிருபர்



யாழ் மாவட்டத்தில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தில் 900 பேருக்கும் மேற்பட்டோர் காவு கொள்ளப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் காவு கொள்ளப்பட்டோர்களின் உறவுகளின் பலத்த அழுகை ஓலத்தின் மத்தியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கரவெட்டி தினகரன் நிருபர்



விசுவமடு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் விசுவமடு பகுதியில் சுனாமி நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

# யாழில் கைதானவர்களில் 70 வீதமானவர்கள் போதைக்கு அடிமையானவர்களென தகவல்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் கைதானவர்களில் சுமார் 70 வீதமானவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என மருத்துவ பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தமை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் 190 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் , அவர்களை சட்ட வைத்திய அதிகாரியின் முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனையும் மேற்கொண்டனர்.

மருத்துவ பரிசோதனை அறிக்கையின் படி 190 பேரில் 125 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ள நிலையில் , இவர்களில் சுமார் 25 பேரை நீதிமன்றங்களின் ஊடாக மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்ப பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியில் லேகியம் விற்ற ஆயுர்வேத வர்த்தக நிலைய உரிமையாளர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் செவனகல லேகியம் என்ற போதையை ஏற்படுத்தக் கூடிய பொருளை விற்பனைக்காக வைத்திருந்த ஆயுர்வேத வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 3கிலோ 720கிராம் எடை கொண்ட எட்டு லேகிய பைக்கற்றுக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸாரால் போதைப்பொருள் பாவனையாளர் என அடையாளம் காணப்பட்ட இளைஞன் ஒருவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் இவ்விளைஞன் தொடர்ச்சியாக குறித்த லேகியத்தை பாவித்ததாக வழங்கிய தகவலின் அடைப்படையிலேயே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

# போதைப்பொருள் தொடர்பில் ஆதாரபூர்வமான முறைப்பாடு கிடைத்தால் கடும் நடவடிக்கை



பாடசாலைகளிலும் தனியார் வகுப்புகளிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது போதைப் பொருட்கள் தொடர்பில் ஆதாரபூர்வமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரித்தார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளில் தற்போது போதைப் பொருட்கள் ஒழிப்பு மற்றும் தெளிவூட்டல் வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இருந்தபோதிலும் சமீப காலமாக ஒரு சில பாடசாலைகள் தனியார் வகுப்புகளில் இருந்து சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப்பொருட்கள் தொடர்பில் முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளன. இதனை நான் வன்மையாகக் கண்டிப்பதோடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தகுதி தராதரம் பார்க்காமல் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்குரிய பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து மாகாண ஆளுநர்களுக்கும் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மத்திய அரசாங்கத்தின் கல்வி செயலாளருக்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் அறிக்கையையும் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்புமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.




# சுற்றுலா பயணிகளால் கடும் போக்குவரத்து நெரிசல்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நுவரெலியாவிற்கு வார இறுதியில் சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் வெளிமாவட்டங்களிலிருந்தும் , வெளிநாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

குறிப்பாக அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் நத்தார் பண்டிகை விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை என தொடர்கிறது.

இதனால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையினை கழிப்பதற்காக செல்கின்றனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை காரணமாக நுவரெலியா விக்டோரியா பூங்காவிலும் கிரகரி பூங்காவிலும் கிரகரி வாவி கரையிலும், உலக முடிவு, சீதை அம்மன் கோவில், வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையம் போன்ற பகுதிகளிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் கூட்டமாக குவிந்துள்ளனர். அத்தோடு நுவரெலியா கிரகரி வாவி கரையில் அமைக்கப்பட்டுள்ள காணிவேல் களியாட்ட நிகழ்வுகளிலும் மட்டக்குதிரை சவாரி செய்யும் இடத்திலும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் குவிந்து காணப்படுகின்றனர். இவ்வாறு சுற்றுலா பயணிகள் விடுமுறை நாட்களில் நுவரெலியாவிற்கு வருகை தருவதால் வாகன தரிப்பிடங்களிலும் பிராதான வீதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.



"மலையக சமூக மாற்றமும் இனத்துவ அடையாளத்தின் நீட்சியும்" என்ற நிகழ்வு கண்டி விவேகானந்தா கல்லூரியில் நேற்று முன்னாள் தமிழ் மொழி பாட இணைப்பாளர் ஆர். பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்றது. இதில் உமா பவுண்டேஷன் தலைவர் தீபனும் கலந்து கொண்டார்.

# சுனாமியில் இறந்தவர்களை நினைவுகூர்ந்த மலையக மக்கள்!

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

சுனாமி ஆழிப்பேரலை இடம் பெற்று 26.12.2023 அன்றுடன் 19 ஆண்டு நிறைவடைவதை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும் துயரமான நிகழ்வாக காலை 9.25க்கு ஆழி பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இவ் அனர்த்தத்தில் உயிர்நீத்த



இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

# இரத்தினபுரியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆறு பாடசாலை மாணவர்கள் கைது

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

இரத்தினபுரி பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகில் கட்டிடம் ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள் ஆறு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஆறு மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லும் சீருடை உடன் வந்து வழியில் சீருடைக்கு பதிலாக வேறு ஆடைகளை அணிந்து கொண்டு சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண் வருவதாகவும் தெரிவிக்கப்பகின்றது.

# சிவனொளிபாதமலை யாத்திரை வீதிகளில் கூடாரம் அமைத்தல், தீ மூட்டுதல் தடை


**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

புனித சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பொது மக்களின் நலன் கருதியும் வசதி கருதியும் புதிய சட்ட திட்டங்கள் பல அமுல் படுத்தப்பட்டுள்ளன. இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் இவ்விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கிணங்க தற்காலிக கூடாரங்கள் அமைத்தல், யாசகம் கேட்டல், யாசகம் வழங்குதல் இரத்தினபுரி சிவனொளிபாத மலை வீதிகளில்அமைந்துள்ள நீர் நிலைகளில் நீராடல், கழிவுப் பொருட்களை கண்ட இடங்களில் வீசுதல், களியாட்டங்களில் ஈடுபடுதல், அம்பலங்கள் எனப்படும் தங்கும் மடங்களை முறைகேடாகப் பயன்படுத்தல் குளிர்காய தீ மூட்டுதல் போன்ற விடயங்கள் தடை செய்யப்பட்டுள்ளதுடன் இவ்விதிகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இப்பிரதேசத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் செயலணிகளின் பிரதானிகள் தெரிவித்தனர்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்



106 கார்கள் விற்பனைக்கு

KM - 6624 Cherry QQ2011 - Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0714 542958 084636

107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

GC - 7760 Toyota Sprinter, 1998Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0714 542958 084640

108 நிஸான் கார் விற்பனைக்கு

302 - 0021 Nissan Sunny, 1997 கார் கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 071 4542 958 084641

64 - 8239 நிசான் சனி 1991, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03, தொ.பே. 0714 542958 084635

113 சுசூகி கார்கள் விற்பனைக்கு


KB - 8280 Suzuki, 2023, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 071 4542 958 084644



119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

NC - PP - 0629 - SUZUKI - LE- DA63T FREEZER - SINGLE CAB - 2005 WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0812081 033 084347

SG - LJ - 6755 - TATA - LPT 1615 - MOTOR LORRY - 2011 - GREY BEIGE WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0812 081033 084336



122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

ABG - 5513 - Bajaj - 2015ABL - 4236 - Bajaj - 2016AAW - 7947 - Bajaj - 2014Three-wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03, தொ.பே. 0711 210810 084639

BFU - 9533 Yamaha FZ2015, Motor Cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0711 210810 084634

QD - 3736 Bajaj - 2005, QZ - 6357 Bajaj - 2010, QJ - 8733 Bajaj - 2007,'YB 8653 Bajaj - 2010, Three wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0711 210810 084642

VGB - 9107 Tvs apache2017, Motor Cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0711 210810 084638

# பெறுகை அறிவித்தல்

**மின்வலு மற்றும் சக்தி அமைச்சு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**LED MONITOR உடன் 33 மேசைக் கணினிகளின் வழங்கலுக்கான பெறுகை**

**B/56/2023**

LED MONITOR உடன் 33 மேசைக் கணினிகளின் வழங்கலுக்காக தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகைமை மற்றும் தகுதி அளவுகோல்களை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இ.பெ.கூ. இற்கு ரூபா 3,500.00 (ரூபா 2,969.25 + 2.5% SSCL + 15% VAT) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின் கொழும்பு 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, 01ஆவது மாடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) இடமிருந்து 2024.01.16 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

அனைத்து விலைமனுக்களும் 100,000.00 ரூபா தொகையின் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.01.17 ஆம் திகதி 14.00 மணிக்கு மூடப்படுவதோடு விலைமனு ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் கீழ் தரப்பட்ட முகவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், முகாமையாளர் அலுவலகத்தில் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். 1987 இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின்படி, எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் https;//eroc.drc.gov.lk/ என்ற இணையதளத்தின் மூலம் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு தமது விலைமனுவுடன் சேர்த்து PCA 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**C/o முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்)**
**பெறுகை மற்றும் களஞ்சியங்கள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆவது மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 09.**
**தொ. 011 5455331, தொலைநகர் - 011 5455424**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

# பெறுகை அறிவித்தல்

## ரம்புக்கனை பிரதேச சபை

01. பின்வரும் வேலைகளுக்காக ரம்புக்கனை பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-11-18ஆம் திகதி வரை தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து வெவ்வேறான வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | நிறைவேற்றுப் பொறியியலாளர் அதிகாரப் பிரதேசம் | வேலை விடயம் | பதிவுத் தரம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட வேலையின் பெறுமதி (ரூபா மில்.) |
|---|---|---|---|---|---|
| 01 | ரம்புக்கணை | ரம்புக்கனை பிரதேச சபைக்குரித்தான மும்மாடி சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் | C3 மற்றும் C2 | 25,000.00 | 166.47 |

02. இந்த விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான பெறுகை நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்படும் என்பதுடன் அரச நிதிச் சுற்றுநிருபம் 03/2020 மற்றும் 03/2020(i) ஆம் இலக்க சுற்றுநிருபம் பெறுகை நடவடிக்கைகளுக்கு இயைபாகும்.
03. வேலை விடயங்களுக்கு இயைபான விலைமனுக்களை 2023-12-28ஆம் திகதி முதல் 2024-01-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் மேற்கூறப்பட்ட வகையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி ரம்புக்கனை பிரதேச சபையின் செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
04. சகல விலைமனுதாரர்களும் பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு இயைபான (மீளளிக்கப்படும்) 2,500,000.00 ரூபா பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் செயலாளர், ரம்புக்கனை பிரதேச சபை எனும் பெயரில் விலைக்கோரல் பிணை முறியொன்றை அல்லது ரம்புக்கனை பிரதேச சபையின் அலுவலகத்திற்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை குறித்த விலைக்கோரல் ஆவணங்களின் மூலப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. மேற்கூறிய நிர்மாணம் தொடர்பிலான மேலதிக விபரங்களை ரம்புக்கனை பிரதேச சபை அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 035-3226413/ 035-2265275)
06. வெற்றிகரமான விலைமனுதாரருக்கு ஒப்பந்தத்தைக் கையளித்தலானது அவர்களின் ஒப்பந்தப் பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. விலைக்கோரலை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. இரு பிரதிகளிலான விலைமனுக்களை 2027-01-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ரம்புக்கணை பிரதேச சபை தலைவரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம் அல்லது செயலாளர், ரம்புக்கனை பிரதேச சபை, ரம்புக்கனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். விலைமனுவின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை கடித உறைகளில் இட்டு வெவ்வேறாக முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.
08. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்பட்டதன் பின் 2024-01-18ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு ரம்புக்கனை பிரதேச சபை அலுவலகத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**செயலாளர்,**
**ரம்புக்கனை பிரதேச சபை.**
**2023-12-27.**

# இலங்கை வங்கி

**கட்டட நிர்மாண கூட்டமைப்பு ஆலோசனைச் சேவைகளுக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கான அழைப்பு**

**கொழும்பு 10 இல் அமைந்துள்ள இலங்கை வங்கியின் ஹைட் பார்க் கிளைக்கு புதிய உருக்கினால் கட்டமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஆலோசகர் ஒருவரைத் தெரிவு செய்தல்**

## கேள்விப்பத்திர இல: BOC/PROP/P/2023/266

கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, 'இலங்கை வங்கி சதுக்கம்', இலங்கை வங்கி, 14ஆம் தளம் (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளர், கீழே விபரிக்கப்பட்டவாறு சுமார் ரூபா 80.0 மில்லியன் செலவில் கொழும்பு 10 இல் அமைந்துள்ள இலங்கை வங்கியின் ஹைட் பார்க் கிளைக்கு புதிய உருக்கினால் கட்டமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக, தகுதிவாய்ந்த மற்றும் தகைமை பெற்ற ஆலோசகர்களிடமிருந்து கூட்டமைப்பு ஆலோசனைச் சேவைகளுக்கான முன்மொழிவுகளைக் கோருகின்றார்.

a. கட்டடமானது, பிரதானமாக smart zone உடன் கூடிய வங்கிச் சேவை மண்டபம் உள்ளடங்கலாக, இலங்கை வங்கியின் கிளை ஒன்றாகத் தொழிற்படும்.
b. போதுமான வாகனத் தரிப்பிட வசதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன், குறைந்தபட்ச வாகனத் தரிப்பிட இடங்களின் எண்ணிக்கை ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும்.
c. இரண்டு மாடிகளைக் கொண்ட உருக்கினால் கட்டமைக்கப்பட்ட கட்டடமாக இருத்தல் வேண்டும் என்பதோடு, எதிர்பார்க்கப்படும் மொத்த தரைப் பரப்பு சுமார் 4,300 சதுர அடிகள் ஆகும்.
d. இக்கருத்திட்டத்திற்காக பசுமைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

1. ஆலோசகர்கள் தெரிவு, தேசிய போட்டிகர ஏல நடைமுறை ஊடாக மேற்கொள்ளப்படும்.
2. இம்முன்மொழிவு கோரலில் விபரிக்கப்பட்ட தரம் மற்றும் செலவு அடிப்படையிலமைந்த தெரிவு முறை (QCBS) மற்றும் நடைமுறைகளின் (RFP) கீழ் ஆலோசனை நிறுவனம் தெரிவு செய்யப்படும்.
3. முன்மொழிவுகளுக்கான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தகைமை பெற, ஆலோசனை நிறுவனம் பின்வரும் பிரமாணங்களை நிறைவு செய்திருக்க வேண்டும்:
   i. கட்டட நிர்மாண ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றாக/ நிறுவனம் ஒன்றாக இருத்தல்.
   ii. கடந்த ஐந்து (05) ஆண்டு காலப்பகுதியில் **முனைப்பான கூட்டமைப்பு ஆலோசனைச் சேவை வழங்குநராக இருந்திருத்தல்.**
   iii. கடந்த ஐந்து (05) ஆண்டு காலப்பகுதியில், ஒவ்வொரு நிர்மாணத்தினதும் பெறுமதி ரூபா 65.0 மில்லியனை விஞ்சுகின்ற, குறைந்தது இரண்டு (02) மாடிகளைக் கொண்ட உருக்கினால் கட்டமைக்கப்பட்ட வணிகக் கட்டடங்கள், குறைந்தபட்சம் இரு (02) கூட்டமைப்பு ஆலோசனைப் பணியை நிறைவு செய்திருத்தல்.

(மேற்குறிப்பிட்டவற்றை உறுதிப்படுத்த, ஆவண ரீதியான சான்றுகள் சமர்ப்பிக்கத் தவறுதல் முன்மொழிவு நிராகரிக்கப்பட வழிவகுக்கும்)

4. முன்மொழிவுக்கான கோரிக்கையினை, கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, 'இலங்கை வங்கி சதுக்கம்', இலங்கை வங்கி, 14வது தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் 2023.12.27 தொடக்கம் 2024.01.16 வரை வேலைநாட்களில் 0900 மணி தொடக்கம் 1430 மணி வரை இலவசமாகப் பார்வையிடலாம்.
5. ஆங்கில மொழியிலான முன்மொழிவுக் கோரிக்கையின் முழுமையான தொகுதியை, ஆர்வமுடைய ஆலோசகர்கள் 2023.12.27 தொடக்கம் 2024.01.16 வரை வேலை நாட்களில் 0900 தொடக்கம் 1430 மணி வரை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, 'இலங்கை வங்கி சதுக்கம்', இலங்கை வங்கி, 14வது தளம், (சொத்துக்களும் சேகரிப்பும்) பிரதான முகாமையாளருக்கு, வியாபாரப் பதிவு மற்றும் எழுத்து மூலமான விண்ணப்பம் என்பவற்றைச் சமர்ப்பித்தும், மீளளிக்கப்படாத ரூபா 6,000/- + வரிகள், காசாகச் செலுத்துவதன் மூலமும் கொள்வனவு செய்யலாம்.
6. முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை 2024.01.17 அன்று 1000 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, 'இலங்கை வங்கி சதுக்கம்', இலங்கை வங்கி, 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும்) பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் உள்ள விலைகூறல் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது மேற்குறித்த முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். கோரிக்கைகள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாக முன்மொழிவுகள் திறக்கப்படும். ஆலோசனை நிறுவனங்களின் எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறக்கும் போது சமூகமளிக்கலாம்.
7. முன்மொழிவுகள் 2024.04.17 வரை செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.
8. 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் ஏதேனும் திருத்தத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாட்டின் பிரகாரம், முன்மொழிவுக்கான கோரிக்கையுடன் PCA 3 படிவம் இணைக்கப்பட வேண்டும்.
9. முன்மொழிவுக்கு முந்திய கூட்டம், கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, 'இலங்கை வங்கி சதுக்கம்', இலங்கை வங்கி, 3ஆம் தளம் கேட்போர் கூடத்தில் 2024.01.03 அன்று 1100 மணிக்கு இடம்பெறும்.
10. மேலதிக விபரங்களுக்கு 0112-204269, 011-2544310 / 2204260 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, 'இலங்கை வங்கி சதுக்கம்', இலங்கை வங்கி, 14ஆம் தளம் (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளரைத் தொடர்புகொள்ளவும்.

**பிரதான முகாமையாளர்**

சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01. இலங்கை.
தொலைபேசி: 094 112204260, 094 112544310, 094 11 2204269
மின்னஞ்சல்: procurement@boc.lk

1975 BOC

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**கமத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சு**

# தேசிய உணவு மேம்பாட்டு சபை

(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)

## 2024 ஆம் ஆண்டிற்கான அரிசி மொத்த வழங்குனர்களை பதிவு செய்தல்

தேசிய உணவு மேம்பாட்டு சபை உலக உணவுத் திட்டத்துடன் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் அமுல்படுத்தப்படும் பாடசாலைக்கான மதிய உணவு வழங்கும் செயற்திட்டத்திற்காக **6 மாத காலத்திற்கு** வெள்ளை நாட்டு அரிசியை வழங்க கூடிய அதற்கான சேமிப்பு வசதிகளுடன் காணப்படும் சாத்தியமான வழங்குனர்களுடன் பதிவு செய்யப்படும்.

இதற்கான தினசரி வழங்கல் திறன் **10 டொன்** அரிசி, மேலும் ஒரு மாதத்திற்கு **200 டொன்** வெள்ளை அரிசியை சபையினால் எதிர்பார்க்கும் விவரக்குறிப்புகளுக்கு வழங்குனர்கள் வழங்க முடியும். இந்த கையிருப்புகளை வழங்கும் வழங்குனர்கள், குறித்த தொகை அரிசியை அநுராதபுரம் கலங்குட்டியில் அமைந்துள்ள எமது தொழிற்சாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டு வழங்க வேண்டும். இதற்கான விபரங்களை விண்ணப்பத்துடன் பெறலாம்.

போக்குவரத்து முறை தொடர்பான விபரங்களை மேற்கோள்களைப் பெறும் வழங்குனர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்க, மேலும் அந்த குறிப்பின்படி அரிசி தொகையை எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்பட வேண்டும். வழங்குனர்கள் **6 மாதங்கள்** வரை அரிசியை சேமித்து வைக்கக்கூடிய சேமிப்பு வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

பதிவு செய்வதற்காக முன்வைக்கும் **ரூபா.1,000.00** கட்டணத்தை தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் செலுத்தி விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ள முடியும். அல்லது விண்ணப்பம் மற்றும் அறிவுறுத்தல் படிவத்தினை **www.nfpb.lk** எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். பதிவுக்கட்டணத்தை இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையத்தின் நிதிப்பிரிவிற்கு **"இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்"** எனும் பெயரில் இலங்கை வங்கி பொரளை கிளையில் **கணக்கு இலக்கம் 194125** இற்கு வைப்புச்செய்து அந்த பற்றுச்சீட்டுடன், முன் அனுபவங்களுக்கான சான்றிதழ் பிரதிகள், வியாபார பதிவுச் சான்றிதழ் பிரதி மற்றும் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் முதற் பிரதி மற்றும் வங்கியின் பற்றுச்சீட்டை பதிவுத்தபாலின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள **2024.01.15** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும். அஞ்சல் தாமதங்களைக் குறைப்பதற்காக விண்ணப்பம் மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை **ffhc.srilanka@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம். விண்ணப்பங்களைப் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி **2024.01.15** ஆம் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்காக அழையுங்கள் : **011 258 0194**

தலைவர்,
**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்ட. தொலைபேசி : 2506895, பெக்ஸ் : 2506907

# கேள்வி அழைப்பு

## தேசிய பூங்காக்களுக்கு சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

**(WL/02/11/Park Cleaning/2024)**

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பின்வரும் தேசிய பூங்காக்களின் அலுவலகங்கள், அலுவலக இடப்பரப்புகள், பங்களாக்கள் மற்றும் பங்களா இடப்பரப்புகள் மற்றும் பங்களாக்களில் உள்ள துணிகளைச் சலவை செய்வதற்கு 2024ஆம் வருடத்தின் பொருட்டு தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் தகுதி வாய்ந்த மற்றும் ஆற்றலுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | பூங்காக்களின் பெயர் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி | செல்லுபடியாகும் கால எல்லை |
|---|---|---|---|
| 1 | யால | 90,000.00 | 2024-03-16ஆம் வரை |
| 2 | உடவளவை | 66,500.00 | |
| 3 | வில்பத்து | 47,000.00 | |
| 4 | நோர்டன் சமவெளி | 100,000.00 | |
| 5 | மின்னேரியா | 70,000.00 | |
| 6 | கவுடுல்ல | 50,000.00 | |
| 7 | உடவளவை எத்அத்துரு செவன | 36,000.00 | |

01. கேள்விதாரர்கள் ஒரு லொட்டிற்கு, பல லொட்களுக்கு அல்லது அனைத்திற்கும் விலைகளைச் சமர்ப்பிக்கலாம்.
02. சுத்திகரிப்புச் சேவைகளை வழங்க வேண்டிய தேசிய பூங்கா கட்டிடங்களின் அமைவிடம், சதுர அடி பரப்பளவு, முற்றத்தின் பரப்பளவு அமைவிடம் தொடர்பாகக் காட்டும் GPS ஒருங்கிணைப்புகள் உட்பட ஏனைய தகவல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
03. சுத்திகரிப்புச் சேவைகளை மேற்கொள்வதற்கு இயைபுடைய ஒப்பந்த நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு சேவைகளை நடாத்திச் செல்வதற்கான வியாபாரப் பதிவு இருத்தல் வேண்டும் என்பதுடன் 2023-12-30ஆம் திகதியில் 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.
04. கடந்த 03 வருடங்களினுள் மாதமொன்றிற்கு 300,000.00 ரூபாவிற்குக் குறையாததும் வருடத்திற்கு 3,600,000.00 ரூபாவுக்குக் குறையாத சேவை வழங்கியமையை ஆவணச் சாட்சி மூலம் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் நிதி ஸ்திரத்தன்மையுடைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதை உறுதி செய்வதற்கு கடந்த கிட்டிய மூன்று வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இயைபுடைய நிறுவனத்தின் வசம் 25 எண்ணிக்கைக்குக் குறையாத சுத்திகரிப்புப் பணியாளர்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதை ஊழியர் சேமலாப நிதி ஆவணங்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
06. தயாரித்துக் கொள்ளப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-01-16ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் மீளளிக்கப்படாத 9,500.00 ரூபா கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி ஆவணங்களுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான கேள்விப் பிணை அல்லது கேள்விப் பிணைமுறியொன்றை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது வனசீவராசிகள் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 2024-01-17ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணைமுறியைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
08. கேள்விப் பிணைமுறியானது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் ஆகக் குறைந்தது 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
09. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-01-17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
10. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
11. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

# பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு

### இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்

# பெறுகை அறிவித்தல்

## பாவிக்கப்பட்ட வாகனங்களை அகற்றல்

1. இரு எண்ணிக்கையான பாவிக்கப்பட்ட வாகனங்களின் அகற்றலுக்காக இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கீழ் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| No. | Vehicle Reg. No. | Make/Model | Fuel Type | Year of manufacture | Bid Security (LKR) |
|---|---|---|---|---|---|
| 01. | PB-8733 | Micro Actyon Sport | Diesel | 2010 | 18,000.00 |
| 02. | 29 Sri 6499 | Mitsubishi | Diesel | 1988 | 8,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைமூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அகலவத்த, டார்டன்பீல்ட், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவன வதிவிட பொறியியலாளர் அல்லது போக்குவரத்து அலுவலகரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 034-2247426/ 2247383) 2023.12.27 ஆம் திகதியிலிருந்து 2024.01.17 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப.9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் அதே முகவரியில் வாகனங்களை பரீட்சிக்கலாம்.
4. 2023.12.27 ஆம் திகதியிலிருந்து 2024.01.17 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமாக 3,000 ரூபாவை (ரொக்கப் பணத்தில் அல்லது பணம் செலுத்தல் கட்டளை) செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் அகலவத்த, டார்டன்பீல்ட், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவன தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை (நேரடியான ஒப்படைத்தல் அல்லது mislprocurement@gmail.com) என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புவதன் மூலம், கொள்வனவு செய்யலாம்.
5. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி உத்தரவாத பாங்கில் அமைந்ததுமான வங்கிப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதி விலைமனுக்கள் தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அவற்றின் இடது பக்க மேல் மூலையில் "Disposal of used vehicles" என அடையாளமிடப்பட்டு 2024.01.17 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில்/ துரித தபால் சேவை/ தூதஞ்சல் சேவையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெட்டியொன்றில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், அதே முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்,**
**டார்டன்பீல்ட், அகலவத்த.**
**27.12.2023**

---

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நீர்ப்பாச அமைச்சு**

## விலைமனு சமர்ப்பித்தலை நீடித்தல்

**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை**
**(L.N.:8996-LK)**

**தேசிய போட்டிரீதியான விலைமனு**

### மண்சரிவு அபாயம் உள்ள 14 மாவட்டங்களில் தானியங்கி மழை அளவி அமைப்புகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு

**ஒப்பந்த இல.: SLMOI/CRES/NBRO/G/NCB/09**

மேல் உள்ள விடயம் தொடர்பில் 2023 டிசம்பர் 5ஆம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரம் சம்பந்தமானது.

குறித்த பெறுகைக் குழு பின்வருமாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியை இத்தால் நீடிக்கிறது;

**விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி:** 2024 ஜனவரி 9 அன்று பி.ப. 3:00
**விலைமனு வழங்குவதற்கான இறுதித் திகதி:** 2024 ஜனவரி 8 அன்று பி.ப. 3:00
**விலைமனு செல்லுபடி காலம்:** 119 நாட்கள் (2024 மே 7 அன்று உட்பட வரையில்)
**விலைமனு பிணை செல்லுபடி காலம்:** 147 நாட்கள் (2024 ஜூன் 4 அன்று உட்பட வரையில்)

**ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி நீடிக்கும்.**

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு நிமிடங்கள் மற்றும் இணைப்பு-I இனை பார்க்க அறிவுறுத்தப்படுவதோடு மேலதிக விபரங்களை தொ. பே.: 0112507855, தொலைநகல்: 0112058451 அல்லது pdcresmpa@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் கொழும்பு 05, ஜாவத்த விதி, இல. 11, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை, பெறுகை பிரிவில் இருந்து பெற முடியும்.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு**
**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை**
**இல. 11, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**
**தொ.பே.: 011 2507855**
**தொலைநகல்: 011 2058451**
**மின்னஞ்சல்: pdcresmpa@gmail.com**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# இலங்கை அரசாங்கம்

**நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**
**நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்**
கடன் இல. Cr. 5685-lk & 9255-lk

## விலைக்கோரல் அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை)** | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள கல்மடுநகர், இயக்கச்சி, புதுக்குடியிருப்பு - A, மற்றும் புதுக்குடியிருப்பு நீர்வழங்கல் திட்டங்களின் மிகுதி நிர்மாண வேலைகள் ஒப்பந்த இல. **MWS&EID/ WaSSIP/ Kilinochchi &Mullativu/ BW/ NCB/ Kalmadunagar/ Iyakkachchi/ Puthukudiyiruppu-A &Puthukudiyiruppu WSS/ AF/2023/03** | ரூபா 12,500/- | ரூபா 1,016,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்திட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2024 ஜனவரி 26ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு |
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (கீழ்நிலை)** | | | | | |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | |
| WaSSIP - பெருந்தோட்டப் பிரிவிற்கு 4WD கெப் வாகனத்தை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல. **MWS/WaSSIP/DSU-NuwaraEliya/ NCB/IOC/Vehicle hiring-Double cab(Plantation)/2023/21** | ரூபா 2,000/- | ரூபா 69,700/- | வாகன உரிமையாளர்கள் அல்லது வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம், நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2024 ஜனவரி 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |
| WaSSIP - பெருந்தோட்டப் பிரிவிற்கு 4WD கெப் வாகனத்தை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல. **MWS/WaSSIP/DSU-NuwaraEliya/ NCB/IOC/Vehicle hiring-Double cab(Plantation)/2023/22** | ரூபா 2,000/- | ரூபா 69,700/- | வாகன உரிமையாளர்கள் அல்லது வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம், நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2024 ஜனவரி 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

3. செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர்வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர்திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும்.**

---

# சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டவாதி பதவிக்கான விண்ணப்பங்களைக் கோருதல்

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 2023-12-22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலினைப் பார்க்கவும்.

**மேலதிக மன்றாடியார் அதிபதி (நிருவாகம்)**
**சட்டமா அதிபர் திணைக்களம்**
**கொழும்பு 12.**

---

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

## ரூ.150,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

09.00%2026'A' தொடர்களின் கீழ் ரூ. 65,000 மில்லியனையும் 10.75%2028'A' தொடர்களின் கீழ் ரூ. 65,000 மில்லியனையும் 11.00%-2030"A" தொடர்களின் கீழ் ரூ. 25,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 டிசம்பர் 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 09.00%2026 'A' | 10.75%2028 'A' | 11.00%2030'A' |
|---|---|---|---|
| ISIN* | LKB01326B011 | LKB01028C151 | LKB01530C152 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ.65,000 மில்லியன் | ரூ.65,000 மில்லியன் | ரூ. 25,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 9.00% ஆண்டொன்றிற்கு | 10.75% ஆண்டொன்றிற்கு | 11.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2013 பெப்ரவரி 01 | 2018 மார்ச் 15 | 2015 மே 15 |
| முதிர்வுத்திகதி | 2026 பெப்ரவரி 01 | 2028 மார்ச் 15 | 2030 மே 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 பெப்ரவரி & 01 ஒகஸ்ட் | 15 மார்ச் & 15 செப்டெம்பர் | 15 மே & 15 நவம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100 இற்கு ரூ. 3.7418 | ரூ.100 இற்கு ரூ.3,1896 | ரூ.100 இற்கு ரூ. 1.4203 |
| ஏல விற்பனைத் திகதி | 2023 டிசம்பர் 28, வியாழக்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2023 டிசம்பர் 28, வியாழக்கிழமை, மு.ப. 11.00 மணி | | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 ஜனவரி 01 | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (இறுதி நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி முன்வைக்கப்படுகின்ற தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.இசட்.எம்.ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்**
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி:+942477011, தொலைநகல்: +942477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### சுத்திகரிப்புப் பிரிவு

### செயற்பாடுகள் திணைக்களத்தின் துப்புரவு தேவைகளுக்காக தொழிலாளர்களை பணியமர்த்தல்

**கேள்வி இல REF-PD/SER/07/2023**

12 மாதங்களுக்காக செயற்பாடுகள் திணைக்களத்தின் துப்புரவு தேவைகளுக்காக தொழிலாளரின் வழங்கலுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகைமை மற்றும் தகுதி அளவுகோல்களை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மக்கள் வங்கியின் (தலைமை அலுவலகம்) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கு இலக்கத்திற்கு 1,500.00 ரூபா (VAT மற்றும் SSCL உட்பட) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி http://ceypetco.gov.lk//public-tenders/ என்ற இ.பெ.கூ. இணையதளத்தில் இருந்து விலைமனுதாரர்களால் விலைமனு ஆவணத்தை தரவிறக்கம் செய்ய முடியும் என்பதோடு விலைமனுவுடன் சேர்த்து கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் 2024.01.10 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும் தளப் பயணத்தில் பங்கேற்க கோரப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2024.01.18 ஆம் திகதி 14.00 மணிக்கு மூடப்படுவதோடு விலைமனு ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் கீழ் தரப்பட்ட முகவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், முகாமையாளர் அலுவலகத்தில் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**C/o முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்)**
**பெறுகை மற்றும் களஞ்சியங்கள்**
**செயற்பாடு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆவது மாடி, இல. 609,**
**டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 09.**

---

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**
**கட்டிடங்கள் திணைக்களம்**
**விலைமனுக்களுக்கான அழைத்தல்**
**தம்புள்ளவில் தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தின் Type B கட்டிடத்தின் மீதி வேலையின் நிர்மாணம்**
[Contract No.: BD-226/Z3/23/RCT04/2023]

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 11.0 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான 'தம்புள்ளவில் தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தின் Type B கட்டிடத்தின் மீதி வேலையின் நிருமாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். நிர்மாணக் காலப்பகுதியானது 91 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016 (iii) மற்றும் 03/2020 ஆகிய அரச நிதி சுற்றறிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் சி7, சி6 அல்லது சி5 ஆகிய தரங்களுக்காக கட்டிட நிர்மாணத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றவர்களாகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் பதிவானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   ''விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியான (பிசிஏ-3) விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது''.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை குருநாகல், வில்கொட பாதை, கட்டிடங்கள் திணைக்கள 3 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று, அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு:
   தொலைபேசி: 037-2222437. தொலைநகல்: 037-2222197
5. 2023.12.27 ஆம் திகதியிலிருந்து 2024.01.10 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக நாலாயிரம் ரூபாவை (4,000 ரூபா) செலுத்திய பின்னர், குருநாகல், வில்கொட பாதை, கட்டிடங்கள் திணைக்கள 3 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2024.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (3 ஆம் வலயம்), பிரதான பொறியியலாளரின் அலுவலகம் (3 ஆம் வலயம்), கட்டிடங்கள் திணைக்களம், வில்கொட வீதி, குருநாகல் என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். குருநாகல், வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்கள 3 ஆம் வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் விலைமனுக்கள் 77 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள பாங்கில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவிருத்தல்.
   - 165,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2024 ஏப்ரல் 24 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் 16.2 ஆம் ITB உபவாசகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள முகவரான்மைகளின் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

**பொறியியலாளர் எஸ்.எஸ். இரன்வட்ட,**
**பணிப்பாளர் நிர்மாணம் (3 ஆம் பிராந்தியம்),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, "செத்சிரிபாய",**
**பத்தரமுல்ல.**

---

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுமானப் பணிக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   I. **RDA/GAM/CE/TEN/2023/32** - கிராமிய பால செயற்திட்டத்தின் கீழ் தெலங்க பாதை பாலத்தில் மீதமுள்ள பணிகளை செய்து முடித்தல் - நீர்கொழும்பு நிர்வாக பொறியியலாளர் பிரிவு
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
   வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

---

# கேள்வி அறிவித்தல்

## கஹவத்த ஆதார வைத்தியசாலைக்கு திரவ கறை நீக்கியின் பெறுகை

10 மாத சலவைத் தேவையைப் பூர்த்தி செற்வதற்காக, கலப்பு லினன், பருத்தி மற்றும் பொலிஸ்டர் துணிகள் 30,000 கிலோகிராம் ஐ சலவை செய்வதற்கு, திரவ கறை நீக்கியை வழங்குவதற்கு, நம்பகமான உற்பத்தியாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இரத்தினபுரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பபாளர் அழைக்கின்றார். எந்த வகையிலும் இந்தத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

**பிரதான தேவைப்பாடுகள்**

எண்ணெய்க் கறைகள் மற்றும் புரதக் கறைகள் விசேடமாக இரத்தக் கறைகளுக்கான கறைகள் அகற்றும் கொள்ளளவை கொண்டிருத்தல் வேண்டும்.

கொள்கலன்களில் குளோரின் அப்படையிலான ப்ளீச் இருப்பின், துணி நீண்ட ஆயுளை பாதிக்காமல் கறைகளை அகற்ற உகந்த "ப்ளீச்" செறிவு இருத்தல் வேண்டும். குறைந்த பட்ச அளவு குளோரின் அடிப்படையிலான "ப்ளீச்" இருப்பது ஒரு முக்கிய விடயமாக இருக்கும்.

சிறந்த கழுவும் செயல்திறனுக்காக மருத்துவமனை பகுதியில் கடின நீர் கலவைகளை சமாளிக்கத் தேவையான பொருட்கள் இருத்தல் வேண்டும்.

அனைத்து கறை நீக்கி விலைமனுவுக்கான பொருள் பாதுகாப்பு தரவு தாள்களை விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.

கறைபோக்கும் கொள்ளளவு மற்றும் துணிகளின் பாதுகாப்பு முன்னேற்றத்தை உறுதி செய்யும் பரிசீலனைக்காக தொழில்நுட்ப கமிட்டிக்கு போதுமான சாம்பிள்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

கறைபோக்கி முன்னேற்றத்தின் அடிப்படையிலான முழுமையான தெரிவு, தொழில்நுட்ப கமிட்டியினால் மேற்கொள்ளப்படும் அத்துடன் பெறுகைக் குழுவினால் உறுதிசெய்யப்படும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பொறியிடப்பட்ட கடித உறையில் "திரவ கறை நீக்கி பெறுகைக்கான கேள்வி" என்று குறிப்பிட்டு தலைவர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணியகம், இரத்தினபுரி" இற்கு முகவரியிட்டு 2024 ஜனவரி 10 மு.ப. 10.30க்கு முன்பு தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம்,**
**இரத்தினபுரி**

---

# பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## கட்டுநாயக்க இலங்கை விமானப்படை பாடசாலையின் நிர்மாண விடயங்களுக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குதல்

**கேள்வி இலக்கம். PRDA/WP/PRO/2023/115**

இவ் அதிகாரசபையின் கீழ்காணும் கொள்வனவை மேற்கொண்டு இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்கின்றன, அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | கேள்விப்பிணை முறி (காசாக அல்லது) | கேள்விப்பிணை முறி (வங்கி/ காப்புறுதி நிறுவனம்) |
|---|---|---|---|
| 01 | மேற்படி பாடசாலையின் நிர்மாண விடயங்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய விவசாய தகவல்கள் வகை மற்றும் அளவுகள் கேள்வி ஆவணத் தொகுதியில் தரப்பட்டுள்ளது. (அலுமினியம் பார்வகை மற்றும் சின்க் அலுமினியம் தகடு) | 15,000.00 | 30,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியை 2023.12.27 முதல் 2024.01.11ம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை கேள்விப் படிவக் கட்டணங்களை ரூ.1,178.75 இற்கு, (அதிகாரசபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, இவ் அதிகாரசபையின் பெறுகைக் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக பெறுகை ஆவண்ங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் மற்றும் திறத்தல் 2024.01.12 பி.ப.2.30 இற்கு இடம்பெறுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ.இல: 011 - 4849825/ 011 - 4849845**

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

**Good Neighbors Sri Lanka**

**முகவரி மாற்றம்**

நுகேகொட, கொஹுவள, மல்வத்த அவெனியூ, 14ஏ. என்ற இடத்தில் அமைந்திருந்த குட் நெய்போர்ஸ் இன்டர்நஷனல் (INGO) ஆனது 2024 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து நுகேகொட, ரேமண்ட் வீதி, 32-ஏ என்ற இலக்கத்திற்கு இடமாற்றம் செய்யப்படும்.

---

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**மஹாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP) திட்ட முகாமைத்துவ பணிமனை**

**நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி** Loan3267-SRI-3268-SRI-Tranche 1

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## திறந்த போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நீர் வழங்கல் அடங்கலாக பொல்பித்திகம PIU அலுவலக இடப்பரப்பில் விருந்தினர் விடுதி இல.1 மற்றும் விருந்தினர் விடுதி இல.2 ஆகியவற்றின் மீதி வேலையின் நிர்மாணம்

**MI/MWSIP/ADB/WKS/Guest Houses-NWP ICB1/NCB/2023/041**

1. மஹாவலி நீர்ப் பாதுகாப்பிற்கான முதலீட்டு திட்ட ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியிடலொன்றை பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் பகுதியொன்றை மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இந்த விலைமனுக்கோரலில் பங்குபற்றலாம்.
2. மஹாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டத்தின் திட்ட (''தொழில் வழங்குநர்'') முகாமைத்துவ பணிமனையின் திட்ட பணிப்பாளரினால் பிரதிநிதிப்படுத்தப்படும் நீர்ப்பாசன அமைச்சானது நீர் வழங்கல் அடங்கலாக பொல்பித்திகம PIU அலுவலக இடப்பரப்பில் விருந்தினர் விடுதி இல.1 மற்றும் விருந்தினர் விடுதி இல.2 ஆகியவற்றின் மீதி வேலையின் நிர்மாணத்திற்காக (''வேலைகள் என அழைக்கப்படுவது'') முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.
3. திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தனி-கட்ட, ஒரு - உறை விலைமனுக்கோரல் நடைமுறைக்கேற்றவாறு நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளிலுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
   - 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடையும் திகதியில் உடனடியான கடந்த ஐந்து (5) வருடங்களுள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட சான்றழிக்கப்பட்ட மொத்த தொகையாக கணக்கிடப்பட்ட வருடாந்த ஆகக் குறைந்த வருடாந்த நிர்மாண நிதிப்புரள்வான தொகையான 210 மில்லியன் இலங்கை ரூபாவை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரரின் பங்குபெறும் பெறுமதியானது 45 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்படின், விலைமனுதாரர் ஒப்பந்தக்காரரொருவராக, கூட்டு முயற்சி பங்குதாரராக அல்லது உபஒப்பந்தக்காரராக ஆகக்குறைந்தது ஒரு (1) ஒப்பந்தத்தில் உடனடியாக கடந்த ஐந்து (5) வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமானளவு மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளின் நிகரான தன்மையிலுள்ளதாக இருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் பங்குபெறுதல் நிகரான தன்மையானது பௌதீக அளவு மற்றும் வேலைகளின் தன்மை, இனம் மற்றும் நிர்மாண முறைமைகளில் இருத்தல் வேண்டும். வேலையின் ஏனைய நிகரான தன்மையானது நிர்மாண தொழில்நுட்பத்தின் குணவியல்புகளுக்காக விலைமனுக்கோரல் ஆவணத்தின் 6 ஆம் பிரிவில் (தொழில் வழங்குநரின் தேவைப்பாடுகள்) விபரிக்கப்பட்டுள்ளன. விலைமனுதாரர் வேலைகளுக்கு உரித்தான திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப விடயங்களில் மேலதிக அனுபவ தேவைகளையும் திருப்தியடைய செய்தல் வேண்டும்.
   - படிவம் FIN-4 இல் சுட்டிக்காட்டியவாறு விலைமனுதாரரின் நிதியிடல் வளங்கள் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்த ரீதியிலான முற்பண கொடுப்பனவுகள் நீங்கலாக விலைமனுதாரர் அவரிடமுள்ள திரவச் சொத்துக்களை சென்றடையும் வழி அல்லது அவைகள் இருப்பதை அறிவித்தல், ஆகியவற்றை காட்சிப்படுத்தல் வேண்டும்.
5. முழுமையான தகுதித்தன்மை மற்றும் தகைமை தேவைப்படுத்தல்களுக்கு விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை பார்வையிடல் வேண்டும்.
6. www.mwsip.lk/information/procurements என்ற தொடர்புடன் எந்தவொரு ஆர்வமுள்ள விலைமனுதாரரினாலும் பரீட்சிப்பதற்காக விலைமனுக்கோரல் ஆவணத்தின் மென்பிரதியொன்றை PDF உருமாதிரியில் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கான அவர்களின் உத்தேசம் மற்றும் விலைமனுவொன்றை சமர்ப்பிப்பதற்கான ஆர்வத்தை ebid.mwsip@gmail.com என்ற மின்னஞ்சலூடாக ஸ்கேன் செய்யப்பட்ட அறிவித்தலுடன் திட்ட பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல்கள் கட்டாயமாக விலைமனுதாரரின் தலைப்புக் கடிதத்தில் எழுதப்பட்டு விலைமனுதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் கையொப்பமிட்டு விலைமனுக்கோல் ஆவணத்தின் டிஜிட்டல் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்காகவும் விலைமனுக்கோரல் செயற்பாட்டின் போது வழங்கப்படவுள்ள மேலதிக தெளிவுறுத்தல்கள் மற்றும் சேர்க்கைக்காக விலைமனுதாரரின் பெயர் மற்றும் முகவரி, தொடர்பு இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடல் வேண்டும். விலைமனுதாரரின் கடிதத்தை பெற்றுக் கொண்ட பின்னர் தொழில் வழங்குநர் மீளளிக்கப்படாத கட்டணமான 15,000 இலங்கை ரூபாவை செலுத்துவதற்காக அவரது வங்கி கணக்கு விபரங்களை அறிவிப்பார். அவ்வாறான பணக்கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர், விரைவாகவே விலைமனுதாரர் பணம் செலுத்தப்பட்ட விடயத்தை உறுதிப்படுத்தி திட்டப் பணிப்பாளருக்கு அறிவிப்பார். விலைமனுதாரரினால் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவு செலுத்தப்பட்ட உறுதிப்பாடு கிடைத்தவுடன் தொழில் வழங்குநர் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான தொடர்பை அறிவிப்பார். முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்று ஆவணங்களின் முழுமையான தொகுதியை பதிவிறக்கம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் இந்த பெறுகையின் செயற்பாட்டிலேற்படும் விளைவுகளுக்கும் அல்லது அதன் பின்னர் விலைமனுதாரரின் செயற்பாட்டிலேற்படும் தவறுகளுக்கும் தொழில் வழங்குநர் பொறுப்பேற்கமாட்டார்.
8. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2024.01.04 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணிக்கு திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுதாரர்களுடனான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனுதாரர்கள் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு நேரடியாக சமுகமளித்தல் வேண்டும் (தொழில் வழங்குநருடனான முன்பதிவுக்குட்பட்டதாக ஆகக் கூடியது இரு பிரதிநிதிகள்). விலைமனுதாரர்கள் மெய்நிகராக்கல் முறைமையூடாகவும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம். விலைமனுதாரர்கள் ஒன்லையின் மாநாட்டு வசதியொன்றை வழங்குவதற்காக 2024.01.02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மின்னஞ்சல்யொன்றின் வழியாக திட்டப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர் தொழில் வழங்குநரின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்பாடுகளுடன் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னராக வேலைத்தளத்தை பார்வையிடலாம்.
9. 2024.01.24 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்தில் (Section 2 – Bid Data Sheet, ITB 19.1) திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர் SCAPC என முகவரியிடப்பட்டு கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 493 1/1 என்ற இலக்கத்திலுள்ள மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் (MWSIP), திட்ட முகாமைத்துவ பணிமனையின் திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தொழில்நுட்ப விலைமனுக்கள் இறுதி நேரம் முடிந்தவுடன் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் மெய்நிகராக்கல் முறைமையூடாகவும் விலைமனு திறத்தல் நிகழ்ச்சியில் பங்கு பெற்றலாம். ஓன்லையின் மாநாட்டு வசதிக்கான தொடர்பை ஏற்படுத்துவதற்காக 2024.01.22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக விலைமனுதாரர்கள் திட்டப் பணிப்பாளருக்கு விண்ணப்பமொன்றை மின்னஞ்சலொன்றின் வழியான அனுப்பலாம்.
10. விலைமனுக்களை தயாரித்தல், விலைமனு முன்கூட்டத்திற்கு சமுகமளித்தல், வேலைத்தளங்களை பார்வையிடல் மற்றும் விலைமனுக்களை ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கு தொழில் வழங்குநர் பொறுப்பேற்கமாட்டார்.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பணிமனை,**
**மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,**
**இல. 493 1/1, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10,**
**இலங்கை.**

**தொலைபேசி இல.: +94 11 2675810/ + 94 11 2675882**
**தொலைநகல் இல.: +94 11 2675227, மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

# நாட்டுக்கு முன்னுரிமை அளிக்காத ஆப்கான் வீரர்கள் மீது நடவடிக்கை



ஆப்கானிஸ்தானுக்கு விளையாடுவதை விடவும் தமது தனிப்பட்ட நலனுக்கு முன்னுரிமை அளித்ததற்காக ஆப்கான் அணியின் முஜீபுர் ரஹ்மான், பஸால் ஹக் பாரூப் மற்றும் நவீன் உல் ஹக் ஆகிய மூன்று வீரர்களுக்கு எதிராகவும் அந்நாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மூன்று வீரர்களுக்குமான 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சம்பள ஒப்பந்தத்தை தாமதப்படுத்தி இருக்கும் ஆப்கான் கிரிக்கெட் சபை, இவர்களுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் வெளிநாட்டு கிரிக்கெட் லீக்குகளில் ஆடுவதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்கப்படாது என்பதோடு தற்போது வைத்திருக்கும் சான்றிதழும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்த மூவரும் 2024 ஜனவர் 1 ஆம் திகதி தொடக்கம் வருடாந்த சம்பள ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதற்கு விருப்பத்தை வெளியிட்டிருப்பதோடு வெளிநாட்டு லீக் கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு ஆப்கான் கிரிக்கெட் சபையிடம் அனுமதி கேட்டுள்ளனர்.

இதனை அடுத்தே ஆப்கான் கிரிக்கெட் சபை இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.

## அறபா வித்தியாலய பழைய மாணவர் கிரிக்கெட் போட்டி

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29) அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடைபெறும் இந்தத் தொடர் பகலிரவு போட்டிகளாக இடம்பெறவிருப்பதோடு 21 பழைய மாணவ அணிகள் பங்கேற்கவுள்ளன.

இச்சுற்றுப்போட்டியில் வெற்றிப்பெறும் அணிக்கு ரூபா 75,000 பணப் பரிசும், சம்பியன் கிண்ணமும் வழங்கப்படும். இரண்டாமிடம் பெறும் அணிக்கு ரூபா 50,000 பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.



நுவரலியா எம்சீ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அணிக்கு எழுவர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் சம்பியன் கிண்ணத்தை வென்ற ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. அணியை படத்தில் காணலாம். நேற்று முன்தினம் (25) நடைபெற்ற இறுதிப் போட்டியில் வை.எஸ்.எஸ்.சி. அணி நெஸ்பி அணியை 02–01 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

(படம்: ஏறாவூர் சுழற்சி நிருபர்)

## சம்பியனானது லிவர்பூல்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் அனுசரணையில், விம்பிள்டன் கழகத்தின் முன்னாள் வீரர் மர்ஹூம் ஜனாப் ஞாபகார்த்தமாக புத்தளம் நகரில் நடைபெற்ற கால்பந்தாட்ட தொடரில் புத்தளம் லிவர்பூல் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 12 அணிகளுக்கு இடையிலான அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இந்தத் தொடர் கிறிஸ்மஸ் தினத்தன்று (25) புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் யுனைட்டட் கழகத்தை இறுதிப் போட்டியில் எதிர்கொண்ட



லிவர்பூல் அணி பெனால்டி சூட் அவுட் முறையில் 3–2 என வெற்றியீட்டியது.

தொடரின் சிறந்த கோல் காப்பாளராக போல்டன் அணியை சேர்ந்த முனாசிர் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் சிறந்த வீரராக லிவர்பூல் கழகத்தின் பவாஸ் தெரிவானார்.

## மகள்மாரின் பெயர்களுடன் களமிறங்கினார் கவாஜா



காசா மனிதாபிமான நெருக்கடி குறித்து செய்தி வெளியிட சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் மறுத்த நிலையில் அதற்கு பதில் பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று (26) ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸி. வீரர் உஸ்மான் கவாஜா தனது பாதணியில் இரு மகள்களின் பெயர்களை எழுதி களமிறங்கியுள்ளார்.

மெல்போர்ன் டெஸ்டில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய 37 வயதான கவாஜாவின் பாதணியில் அவரது இரு மகள்களான ஆய்ஷா மற்றும் ஐலாவின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த கவாஜா, தனது துடுப்பு மற்றும் பாதணியில் கறுப்பு புறாவுடன் உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தின் முதலாவது சரத்தை குறிப்பிடும் "01: UDHR" என்ற பதத்தைக் கொண்ட ஸ்டிக்கரை ஒட்டுவதற்கு ஐ.சி.சி அனுமதி மறுத்தது.

ஏற்கனவே முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர் கையில் கறுப்புப் பட்டியுடன் களமிறங்கியதால் ஐ.சி.சி எச்சரிக்கைக்கு உள்ளாகினார்.

இந்நிலையில் வேறு சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் தமது துடுப்பில் மத அடையாளங்கள் மற்றும் செய்திகளை காண்பிக்கும் படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட கவாஜா, ஐ.சி.சி இரட்டை நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

## ஈராக்கில் பதில் தாக்குதல் நடத்த பைடன் உத்தரவு




ஆளில்லா விமானத் தாக்குதலில் ஒருவர் படுகாயமுற்று மூன்று அமெரிக்க பணியாளர்கள் காயமடைந்த நிலையில் ஈராக்கில் ஈரானுடன் தொடர்புபட்ட படைகள் மீது அமெரிக்கா பதில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

ஈராக்கில் கதப் ஹிஸ்புல்லா மற்றும் அதனுடன் தொடர்புபட்ட குழுக்களினால் பயன்படுத்தப்படும் மூன்று தளங்கள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டதாக அமெரிக்க பாதுகாப்புச் சபை பேச்சாளர் அன்ட்ரினே வொட்சன் குறிப்பிட்டுள்ளார்.

இர்பில் விமானத்தளத்தில் கடந்த திங்களன்று (25) நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலிலேயே அமெரிக்கப் பணியாளர்கள் காயமடைந்துள்ளனர்.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது அடிக்கடி தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலிய தாக்குதலில் ஈரான் மூத்த தளபதி பலி



சிரிய தலைநகர் டமஸ்கஸில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஈரானின் மூத்த இராணுவத் தளபதி சையிட் ராஸி மூசாவி கொல்லப்பட்டுள்ளார்.

அவர், ஈரானியச் சிறப்புப் படையின் வெளிநாட்டுப் பிரிவில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த மூத்த ஆலோசகர் என்று ஈரான் தெரிவித்தது. சிரியா, ஈரான் இராணுவ உறவை அவர் மேற்பார்வையிட்டு வந்ததாக ஈரானிய அரசாங்க ஊடகம் கூறியது.

இஸ்ரேலுக்கு உரிய பதிலடி தரப்படும் என்று ஈரான் கூறியது.

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மூத்த தளபதியின் மரணத்துக்கு இரங்கல் தெரிவித்தார். குற்றத்துக்கு இஸ்ரேல் கட்டாயம் பதில் சொல்லும் என்று அவர் குறிப்பிட்டார்.

எனினும் இது தொடர்பில் இஸ்ரேல் எந்த பதிலும் அளிக்கவில்லை. எல்லை கடந்து நடத்தும் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் அரிதாகவே வெளியுலகுக்கு கருத்து கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நைஜீரிய கிராமங்கள் மீது தாக்குதல்: 160 பேர் பலி



மத்திய நைஜீரிய கிராமங்கள் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 160 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக சமய மற்றும் இன ரீதியான பதற்றம் நீடிக்கும் இந்தப் பிராந்தியத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டதாக இராணுவம் முன்னர் கூறிய எண்ணிக்கையை விட இது பல மடங்கு அதிகமாகும்.

"கொள்ளைக்காரர்கள்" என்று அழைக்கப்படும் ஆயுத கும்பல்கள் 20க்கும் குறையாக சமூகக் குழுக்களை இலக்கு வைத்து ஒருங்கிணைந்த தாக்குதலை நடத்தி இருப்பதாக உள்ளூர் அரச தலைவரான கசாஹ் தெரிவித்துள்ளார்.

இங்கு இயற்கை வளங்களை பகிர்வதில் நாடோடி மேய்ப்பாளர்கள் மற்றும் விவசாயிகள் இடையே நீண்டகாலமாக மோதல் நீடித்து வருவதோடு, 2009 தொடக்கம் வட கிழக்கு நைஜீரியாவில் ஜிஹாதிய மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

# ஹமாஸை அழிக்கும் வரை போரை தொடர இஸ்ரேலிய பிரதமர் உறுதி

## உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரிப்பு

போர் நிறுத்தம் ஒன்றுக்கான சர்வதேச அழுத்தம் அதிகரித்து வரும் நிலையிலும் காசாவில் ஹமாஸ் அழிக்கப்படும் வரை தொடர்ந்து போரிடப்போவதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் ஒருமுறை உறுதி அளித்துள்ளார்.

வடக்கு காசாவில் கடந்த திங்கட்கிழமை (25) இஸ்ரேலிய துருப்புகளை சந்தித்த நெதன்யாகு, தனது லிகுட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பேசியபோது, போர் முடிவதற்கு இன்னும் தொலைதூரம் இருப்பதாக கூறியதோடு அரசு சண்டையை நிறுத்தப்போவதாக ஊடகங்கள் வெளியிடும் தகவல்களை நிராகரித்தார்.

இராணுவ அழுத்தம் இன்றி ஹமாஸின் பிடியில் எஞ்சி இருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதில் இஸ்ரேலால் வெற்றிபெற முடியாது என்றும் நெதன்யாகு குறிப்பிட்டார்.

"நாம் நிறுத்தப்போவதில்லை. போர் முடிவு வரை, நிறைவடையும் வரை தொடரும் என்பதோடு அதற்கு குறைவாக இருக்காது" என்று நெதன்யாகு கூறினார்.

காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் அந்தப் பகுதியில் பெரும் உயிர்ச் சேதத்தையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தி இருப்பதோடு அது மத்திய கிழக்கு பிராந்தியம் எங்கும் பதற்ற சூழலையும் போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழுத்தத்தையும் அதிகரித்துள்ளது.

இஸ்ரேலின் நெருங்கி கூட்டாளியான அமெரிக்கா கூட, காசா போர் நடவடிக்கையின் தீவிரத்தை குறைத்து பொதுமக்களை பாதுகாக்கும்படி வலியுறுத்தி வருகிறது.

எனினும் வோல் ஸ்ட்ரீட் ஜெர்னல் பத்திரிகையில் வெளியான கருத்துக் கட்டுரையில், நெதன்யாகு தனது பயணத்தை தொடர்வதற்கு உறுதி அளித்துள்ளார்.

"ஹமாஸ் அழிக்கப்பட வேண்டும், காசா இராணுவமயமற்ற பகுதியாக மாற்றப்பட வேண்டும் மற்றும் பலஸ்தீன சமூகம் கடும்போக்கு நிலையில் இருந்து மாற்றப்பட வேண்டும். இது காசாவில் உள்ள பலஸ்தீன அயலவர்களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான அமைதிக்கான மூன்று முன் நிபந்தனைகள்" என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு பெரும் இழப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் இஸ்ரேலின் அபகரிக்கும் நிபந்தனைகளுக்கு அடிபணியப்போவதில்லை என்றும் காசாவுக்கான ஹமாஸ் தலைவர் யஹ்யா அல் சின்வார் திங்கட்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

"அல் கஸ்ஸாம் படையினர் (ஹமாஸ் ஆயுதப்பிரிவு) கடுமையாகப் போராடி வருகிறதோடு இஸ்ரேலிய ஆக்கரமிப்பு படைகளுடன் முன்னெப்போதும் இல்லாத போர் ஒன்றை எதிர்கொண்டுள்ளனர்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



கடந்த ஒக்டோபர் பிற்பகுதியில் காசா மீது தரைவழி தாக்குதலை ஆரம்பித்த இஸ்ரேலிய துருப்புகள் அங்கு தொடர்ந்தும் கடும் எதிர்ப்பை சந்தித்து வருகிறது. கடந்த திங்களன்றும் இரு இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதை அந்த இராணுவம் உறுதி செய்தது. இதன்மூலம் அங்கு கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 160 ஆக உயர்ந்துள்ளது.

### தொடரும் வான் தாக்குதல்

மறுபுறம் காசா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தொடர்ந்து எந்தத் தணிவு இன்றி தீவிரமாக நடத்தி வருகிறது. தெற்கு காசாவில் உள்ள மிகப் பெரிய மருத்துவ வசதியான கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனைக்கு அருகில் இஸ்ரேல் நேற்றுக் காலை வான் தாக்குதல்களை நடத்தியது. கான் யூனிஸில் உள்ள அல் அமல் பகுதியில் இருக்கும் வீடு ஒன்றின் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டு வீசியதில் ஏழு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். காசாவில் கடந்த 11 வாரங்களாக நீடிக்கும் தாக்குதல்களில் அதிக உயிரிழப்புகள் பதிவான இரவுகளில் ஒன்றாக கடந்த ஞாயிறு இரவு இருந்தது. அன்று 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன.

மத்திய காசாவின் மகாசி அகதி முகாம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட 70க்கும் மேற்பட்டவர்களது உடல்கள் வெள்ளைத் துண்டினால் கட்டப்பட்டு வரிசையில் வைக்கப்பட்ட நிலையில் அதனை சுற்றிவர மக்கள் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினார்கள்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலைத் தொடர்ந்து ஆரம்பமான இந்தப் போரில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 20,674 ஆக அதிகரித்துள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

தவிர, 7,000க்கும் அதிகமானவர்கள் காணாமல்போயிருப்பதோடு பலரும் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக கூறப்படுகிறது. இந்தப் போரில் 54 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்.

போர் நிறுத்தத்திற்கான இராஜதந்திர முயற்சிகளிலும் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது.

காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு பகரமாக அங்கு அதிகாரத்தை கைவிடும் எகிப்தின் முன்மொழிவை ஹமாஸ் மற்றும் அதன் கூட்டளியான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புகள் நிராகரித்திருப்பதாக இரு எகிப்து பாதுகாப்பு வட்டாரத்தை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் பணயக் கைதிகளை விடுவிப்பதில் பலஸ்தீன போராளிகள் எந்த சலுகையையும் காண்பிப்பதில்லை என்றும் அந்த




வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஹமாஸ் மற்றும் அதனை ஒத்த போராட்ட அமைப்பான இஸ்லாமிய ஜிஹாத் இரண்டுமே இஸ்ரேலை ஒழிப்பதற்கு உறுதிப் பூண்டிருப்பதோடு அந்த இரு அமைப்புகளின் பிடியிலும் தொடர்ந்தும் 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

கட்டாரின் மத்தியஸ்தத்துடன் எகிப்தில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான மறைமுக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதோடு இதில் மேலும் பணயக்கைதிகளை விடுவிக்கும் வகையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான முன்மொழிவை எகிப்து பரிந்துரைத்துள்ளது. இதில் தற்போது ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருக்கும் காசாவின் தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு விரிவான உடன்படிக்கையுடன் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கும் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறுகலான காசா நிலப்பகுதியில் பெரும் பகுதியை இஸ்ரேல் அழித்திருக்கும் சூழலில் அங்கு வாழும் 2.3 மில்லியன் மக்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு எந்த வசதியும் இல்லாத தற்காலிக முகாம்களில் வாழ்கின்றனர். அங்கு மனிதாபிமான பேரழிவு ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

## 230 விமானங்களில் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் அனுப்பிய அமெரிக்கா

காசாவில் போர் ஆரம்பித்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் அமெரிக்கா 230 சரக்கு விமானங்கள் மற்றும் 20 கப்பல்களில் இஸ்ரேலுக்கு இராணுவ ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை அனுப்பி இருப்பதாக இஸ்ரேலிய ஊடகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் யெடியோட் அஹரோனொத் என்ற பத்திரிகை விரிவான விபரத்தை வெளிட்டுள்ளது. வழங்கப்பட்டிருக்கும் உதவிகளில் பீரங்கி வெடிபொருட்கள், கவச வாகனங்கள் மற்றும் துருப்புகளுக்கு அத்தியாவசியமான உபகரணங்கள் அடங்குகின்றன.



காசா பகுதியில் தற்போது நீடிக்கும் போரின் செலவு சுமார் 64 பில்லியன் ஷெகல்ஸ் (சுமார் 17 பில்லியன் டொலர்) இருக்கும் என கணிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் போர் ஆரம்பித்த பின் இராணுவ கிடங்குகளில் வைத்திருந்து பெரும்பாலான வெடி பொருட்கள் தீர்ந்திருப்பதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 27ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.